ஸ்ரீ ராமாயணம்

பி. ஸ்ரீ.

91. பட்டணப் பிரவேசம்

சக்ரவர்த்தியின் சேனை வீரர்கள் தன்னைக் கை கூப்பி வணங்க அந்தக் கூட்டத்திற்கு இடையே போய் ராமன் தந்தையின் பாதங்களில் வணங்கினான். வணங்கி எழுந்த அளவிலே சக்ரவர்த்தி மகனைத் தழுவிக் கொண்டான்.

இக் காட்சியை வர்ணிக்கும் பாட்டு :

அனிகம்வந்(து) அடிதொழக்
கடிதுசென்(று), அரசர்கோன்
இனியபைங் கழல்பணிந்(து)
எழுதலும், தழுவினான்,
மனுவெனும் தகையன்மார்(பு)
இடைமறைந் தனமலைத்
தனிநெடுஞ் சிலைஇறத்
தவழ்தடங் கிரிகளே.

[அனிகம்—சேனை. கடிது - விரைவாக. அரசர்கோன் - தசரத சக்ரவர்த்தி. பைங் கழல்-பசும் பொன்னால் செய்த வீரக் கழல் அணிந்த பாதம். மனு எனும் தகையன் - மனுச் சக்ரவர்த்தி யென்று சொல்லந் தக்க சிறப்பு வாய்ந்த தசரதன். மலைத் தனி நெடுஞ்சிலை - மலை போன்ற ஒப்பற்ற பெரிய சிவ தனுசு. இற - ஒடியும்படி. தடங்கிரிகள் - ராமனுடைய தோள்களாகிய மலைகள்.]

சேனை வந்து அடி தொழ, ராமன் விரைவாகச் சென்று அரசர்கோனுடைய திருவடிகளில் பணிந்து எழுதலும் அவன் இவனைத் தழுவிக்கொண்டான். அப்போது, 'ஆதி மனுச் சக்ரவர்த்திதானோ?' என்று அதிசயிக்கும்படி விளங்கிய மாட்சியோடு கூடிய தசரத சக்ரவர்த்தி ராமனைத் தழுவிக் கொண்டதும், அந்தப் பரந்த மார்பிலே மறைந்து விட்டனவாம் ராமன் தோள்கள். ஆம், மலையை முறித்த மலைகளென்று சொல்லும்படி திமிர்ந்து சிவதனுசை முறித்த ராமனுடைய வீரத் தோள்கள்.

பிறகு லக்ஷ்மணன் வந்து வணங்க அவனையும் தசரதன் தழுவிக்கொண்டான். அப்பால் ராமன் தாய்மார்களை வணங்கினான். பரமானந்தம் அவர்களுக்கு. ராமன் தசரதனை வணங்கியது போலப் பரதன் வந்து ராமனை வணங்கினான்; ராமனும் அப்படியே அவனைத் தழுவிக்கொண்டான்.

உன்னுபேர் அன்புமிக்கு
    ஒழுகிஒத்(து) ஒண்கணீர்
பன்னுதா ரைகள்தரத்
    தொழுதெழும் பரதனைப்,
பொன்னின்மார்(பு) உறஅணைத்(து)
    உயிருறப் புல்லினான்,
தன்னை அத் தாதைமுன்
    தழுவினால் என்னவே.

[உன்னு—நினைக்கும் தன்மையுள்ள. மிக்கு—மிகுந்து. ஒழுகி ஒத்து—ஒழுகினாற் போல; (அதாவது) பெருகினாற் போல. ஒண் கணீர்—ஒளி பொருந்திய கண்களிலிருந்து பெருகிய நீர். பன்னு தாரைகள் தர—அடர்ந்த தாரைகளாகப் பெருக. பொன்னின் மார்பு — பொன் போன்ற அழகிய அருமையான மார்பு. மார்புற — மார்பிலே அழுந்த. உயிர் உற—உயிரோடு பொருந்த. புல்லினான் — தழுவினான். தாதை — தந்தையாகிய தசரதன். தழுவினால் என்ன-தழுவினாற் போல.]



பரதன் ராமனையே எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பானும்; அவ்வளவு பேரன்பு அவனுக்கு ராமனிடம். இப்போது ராமனைக் கண்டதும் கண்ணீர் வந்துவிட்டது. அக் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகி வந்தது. உள்ளத்திலே தான் கொண்டிருந்த அந்தப் பேரன்பு அங்கே அடங்காமல் பொங்கிப் பெருகினாற் போல, அந்த ஒளி பொருந்திய கண்களிலிருந்து கண்ணீர் பெருகி வந்ததாம்.

அந்த நிலையில் பரதன் ராமனைத்தொழுதான். தொழுது எழுந்த பரதனை ராமனும் தழுவிக் கொண்டான்.

தன்னை அத் தாதைமுன்
தழுவினான் என்னவே

என்று தசரதன் ராமனைத் தழுவிக் கொண்டதையே உவமையாக்குகிறான் கவிஞன், பரதனை ராமன் தழுவிக் கொண்டதற்கு. வேறு எந்த உவமை சொன்னாலும், இவ்வளவு பொருத்தமாக இருக்குமா?

பரதனுக்கும் ராமனுக்கும் உள்ள அன்புத் தொடர்பை வர்ணிக்கும் இப் பாட்டு விசேஷ கவனத்திற்கு உரியது. தன் தாயின் சூழ்ச்சியால் கிடைத்த மகாராஜ்யத்தைத் துச்சமாக மதித்துத் 'சீ' யென்று தள்ளி விட்டுச் சோகமே வடிவாக ராமனைத் தேடிக் காட்டுக்குப் புறப்படப் போகிறானல்லவா? அத்தகைய தியாக விளைவிற்கு, இங்கே பரதன் காட்டும் பேரன்பைக் கவிஞன் விதைக்கும் வித்தென்று கொள்ளவேண்டும்.

பிறகு, லக்ஷ்மணன் பரதனை வணங்கினான். சத்துருக்னன் ராம லக்ஷ்மணர் இருவரையும் வணங்கினான். பிறகு தசரதன், தன் சேனை முதலியவற்றை நடத்திக் கொண்டு முன்னே போகும்படி ராமனுக்குக் கட்டளையிட்டான். அப்போது அந்தச் சேனை வீரர்களின் மகிழ்ச்சியைத்தான் என்னென்பது?

தாதையோ(டு) ஒத்த(து)அத்
தானையின் தன்மையே.

[தாதை — தந்தையாகிய தசரதன். தானை — சேனை.]

அந்தச் சேனை வீரர்களும், ராமனைக் கண்ட சக்ரவர்த்திபோல் அவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்களாம், அவன் தங்களை நடத்திக் கொண்டு மிதிலைக்குப் போகிறானென்று தெரிந்ததும்.



தம்பியர் மூவரும் குதிரைமேல் இரு பக்கமும் வர, ராமன் தேர்மீது சென்றான். அப்போது, சங்கு பேரிகைகள் ஒருங்கே முழங்கி எல்லோரும் அடைந்த குதூகலத்தை வெளியிட்டன:

தொழு(து)இரண்(டு) அருகும், அன்(பு)
உடையதம் பியர்
தொடர்ந்(து),
அழிவில்சிந் தையின்உவந்(து)
ஆடல்மா மிசைவர,
தழுவுசங் கொடுநெடும்
பணைதழங் கிடஎழுந்(து)
எழுதருந் தகையதோர்
தேரின்மேல் ஏகினான்.

[இரண்டு அருகும் — இரு பக்கங்களிலும். அழிவில் சிந்தையின் உவந்து — அன்பு அழிதலில்லாத சிந்தையில் மகிழ்ச்சி கொண்டு. ஆடல் — வெற்றி. மா - குதிரை. மிசை-மீது. நெடும்

பணே - பெரும் பேரிகை. தழங்கிட - முழங்கிட. எழுதருந் தகையது - வர்ணிக்க முடியாத மிக அழகு வாய்ந்தது.]

தொழுது இரண்டு பக்கங்களிலும் அன்புடைய தம்பிமார் மூவரும் தொடர்ந்து பெரு மகிழ்ச்சியுடன் குதிரை மீது வர, வாத்ய கோஷங்களுக்கிடையே, ராமன் மிக அழகிய ரதத்தின் மேல் புறப்பட்டுப் போனான்.

மிதிலாபுரியில் ராமன் சகோதரர்களுடன் பிரவேசித்ததும், மாளிகையின் உப்பரிகைகளில் பெண்கள் கூட்டங் கூட்டமாக வந்து நின்று அதிசயமாகப் பார்க்கத்தொடங்கினர்கள். வீதி வழியே போகும் மணமகன்மீது பூ மழை பொழிந்தார்கள்.

இந்த வசீகரமான காட்சியை வெளியிடும் வார்த்தைகளும் எவ்வளவு வசீகரமாக வந்து விழுகின்றன, பாருங்கள்!

பஞ்சிசூழ் மெல்லடிப்
  பாவைமார் பண்ணைசூழ்
மஞ்சுசூழ் நெடியமா
  ளிகையின்வந்(து)
    இடைவிராய்,
நஞ்சுசூழ் விழிகள்பூ
  மழையின்மேல்
    விழநடந்(து)
இஞ்சிசூழ் மிதிலைமா
  வீதிசென்(று) எய்தினன்.

[பஞ்சி-பஞ்சு, (இங்கே) செம்பஞ்சக் குழம்பு. பாவைமார் - சித்திரம் போன்ற அழகிய பெண்கள். பண்ணை-கூட்டம். மஞ்சு - மேகங்கள். இடை — இடந்தோறம். விராய்-விரவி, கலந்து. இஞ்சி - மதில். மா - பெரிய.]

அவர்கள் பொழியும் மலர் மழையோடு அவர்களுடைய விழி-மலர்களும் ராமன்மேல் விழுகின்றனவாம். அந்த விழிகளை 'நஞ்சு சூழ் விழிகள்' என்று குறிப்பது, அந்த உள்ளங்களிலுள்ள வேகம், ஆத்திரம், ஆசை முதலான உணர்ச்சிகளை யெல்லாம் ஒருங்கே உய்த்துணர வைக்கிறது.

பி. ஸ்ரீ.

92. அழகும் பரபரப்பும் — அலங்காரமும் அலங்கோலமும்

சீதைக்கு வாய்த்த மணவாளனைப் பார்க்க வேண்டுமென்று, பட்டணத்து வீதியெல்லாம் மாளிகைகளெல்லாம் பெண்கள் மொய்த்து விட்டார்கள். சிலர் வீதிகளில் இப்போது தான் வந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் அங்கு மிங்கும் திரிந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் உப்பரிகைகளின் உச்சியிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் காட்சியைப் பல படங்களாகப் பிடித்துக் காட்டுகிறான் கவிஞன். முதலாவது படம் :

மானினம் வருவ போன்றும்,
  மயிலினம் திரிவ போன்றும்,
மீனினம் மிளிர வானின்
  மின்னினம் மிடைவ போன்றும்,
தேனினம் சிலம்பி ஆர்ப்பச்
  சிலம்பினம் புலம்பி ஏங்க,
பூநனை கூந்தல் மாதர்
  பொம்மெனப் புகுந்து மொய்த்தார்.


[இனம் – கூட்டம். மீனினம் – நக்ஷத்திரக் கூட்டம். மின் – மின்னற் கொடி. மிடைவ – நெருங்குவன. தேனினம் – (இங்கு) வண்டினம். சிலம்பி ஆர்ப்ப – ரீங்காரித்து ஆரவாரம் செய்ய. சிலம்பு – பாதச் சிலம்பு.]

வீதியில் வந்து கொண்டிருந்தவர்களில் சிலர் மருண்டு பார்த்துக் கொண்டே மான் கூட்டம் வருவது போல வருகிறார்கள். வேறு சிலரோ தங்கள் சாயலின் பெருமிதம் தோன்ற, கூந்தலின் பொலிவும் ஆடையாபரணங்களின் ஜொலிப்பும் இனிது புலனாகுமாறு, அங்குமிங்கும் திரிந்து கொண்டிருக்கிறார்கள் — தோகை விரித்து ஆடி வரும் மயில் – கூட்டம் போலே. இது ஒரு காட்சி.

இனி நாம் பார்வையை உயரச் செலுத்தி வானளாவிய மேல் மாடங்களைப் பார்ப்போம். அங்கும் மேலே சொன்ன இரு வகையான மாதர்களின் தோற்றந்தான். நாணம் நிறைந்த சுபாவமுள்ளவர்கள் ஒதுங்கி நக்ஷத்திரக் கூட்டம் மிளிர்வது போலக் கூடி நின்று வீதியை நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்: சில உப்பரிகைகளிலோ கண்ணைப் பறிக்கும் அழகுடையவர்கள் ஜாஜ்வல்யமாகத் தங்களை அலங்கரித்துக்கொண்டு மின்னற் கொடிகள் நெருங்கி நிற்பது போல நின்று, ராமன் பவனி வரும் காட்சியை நோக்குகிறார்கள். மின் வெட்டுவது போல் அவர்கள் பளிச்சுப் பளிச் சென்று திரும்பி அங்கு மிங்கும் நோக்குகிறார்கள் என்பதும் குறிப்பு.

அந்தப் பெண்கள் அங்குமிங்கும் திரும்பும்போதும் நடக்கும்போதும், அவர்கள் அணிந்துள்ள பூமாலைகளில் மொய்த்திருக்கும் வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன. அந்த ரீங்காரத்துடன் பாதச் சிலம்புகளின் இசையும் இசைந்து கொள்கிறதாம்.

பாதச் சிலம்புகளின் ஓசையைச் 'சிலம்பினம் புலம்பி ஏங்க' என்று குறிப்பிடுகிறான் கவிஞன். வண்டுகளின் ரீங்காரம் உத்ஸாக கீதம் என்பதும், பாதச் சிலம்பின் ஒலி ஒரு வகை ஏக்கம் போன்ற சோக கீதம் என்பதும் குறிப்பு.



இப்படியெல்லாம் பெண்கள் வீதியிலும் உப்பரிகைகளிலும் புகுந்து மொய்த்த அழகையும் விரைவையும்,

பூநனை கூந்தல் மாதர்
பொம்மெனப் புகுந்து
மொய்த்தார்

என்று காட்டுவது இந்தப் பாட்டுக்கு வசீகரமான 'முத்தாய்ப்பு.'

மானினம் வருவ போன்றும்
மயிலினம் திரிவ போன்றும்

என்று வீதியைக் காட்டிய பின், உப்பரிகையை,

மீனினம் மிளிர வானின்
மின்னினம் மிடைவ போன்றும்

என்று காட்டுவதுதான் எவ்வளவு வசீகரமாக இருக்கிறது! நக்ஷத்திரங்களுக்கும் மின்னற் கொடிகளுக்கும் அடைமொழியான 'வானின்' வாக்கிய நடுவில் சிங்க நோக்காக இருப்பதுதான் எவ்வளவு அழகாயிருக்கிறது, கம்பீரமாயிருக்கிறது!

வானத்திலிருந்து இப்போதுதான் இறங்கி வந்த நட்சத்திரமாதர் போலவும்,

மின்னற்கொடிகள் போலவும் அவ்வளவு வசீகரமாய்க் காட்சியளிக்கிறார்கள் என்பது குறிப்பு.

பாட்டைத் திரும்பத் திரும்பப் படித்துப் படித்து — ஏன், பாடிப் பாடித்தான் — அனுபவிக்க வேண்டும். அப்போது தான் இது ஒரு பரிபூர்ண சப்த சித்திரம் என்பது புலனாகும்.

* * *

ராமன் பவனி வருகிறான் என்று கேள்விப்பட்டதும் அழகு செய்து கொண்டு புறப்படுவதற்குக் கூட நேரமில்லையாம் சில பெண்களுக்கு. கடந்துவரும் வேகத்திலே அவிழ்ந்து விழும் கூந்தலையும் எடுத்து முடித்துக்கொள்ள அவகாச மில்லை. சரி, அவர்கள் ஏன் அழகு செய்து கொள்ள வேண்டும்? அந்தப் பட்டணத்திற்கே — பெண் குலத்திற்கே — ஆபரணங்களா யிருக்கிறார்க ளல்லவா?

64

222

விரிந்துவீழ் கூந்தல் பாரார்,
மேகலை அற்ற நோக்கார்,
சரிந்தபூந் துகில்கள் தாங்கார்,
இடைதடு மாறத் தாழார்,
நெருங்கினர், நெருங்கிப் புக்கு,
"நீங்குமின்! நீங்கு மின்!" என்(று)
அருங்கலம் அனைய மாதர்
தேன் நுகர் அளியின் மொய்த்தார்.

[அற்ற — அறுந்து சிந்துவன. பூந்துகில் — பூப்போல் மெல்லிய பட்டாடை. தாழார் — தாமதியாதவராய். புக்கு — போய். நீங்குமின் — விலகுங்கள். என்று — என்று சொல்லிக் கொண்டு. அருங்கலம் — பெறுதற்கு அரிய ஆபரணம். அனைய — ஒத்த. நுகர் — பருக வரும். அளியின் — வண்டுகள் போல.]

விரிந்து விழும் கூந்தலையும் கட்டிக் கொள்ளாமல் தலைவிரிகோலமாய் வந்தது மட்டுமா? அந்தப் பரபரப்பிலே பட்டாடையை எப்படியோ கட்டிக்கொண்டு, அதற்குமேல் ஒட்டியாணம் போன்ற மேகலையையும் சுற்றிக்கொண்டு ஓடிவருகிறார்கள். அந்த ஓட்டத்திலே மேகலாபரணம் அறுந்து போயிற்று என்பதையும் கவனிக்க வில்லையாம். அதுதான் போகட்டும். சித்திரப் பூம்பட்டாடை சரிந்து போவதையும் சரிப்படுத்திக் கொள்ளாமல் வருகிறார்களென்றால், அந்த ஆத்திரத்தை என்னென்பது? 'எங்கே கொஞ்சம் தாமதமாகி விடுமோ? சீதை மணவாளனைப் பார்க்க முடியாமலே போய்விடுமோ?' என்ற ஒரே எண்ணந்தான், ஆத்திரம்தான்.

இவர்கள் ஒருவரை ஒருவர் நெருக்கிக் கொண்டு கூட்டமாக வருகிறார்கள். வரும்போதே 'விலகுங்கள், விலகுங்கள்' என்ற ஒரே சத்தந்தான். ஒருவரை யொருவர் நோக்கிப் பேசிக்கொண்டது அந்த ஒரே வார்த்தைதான். வந்து சேர்ந்ததும் தேனைப் பருகும் வண்டுகள்போல மொய்த்துக் கொள்கிறார்கள், ராமனைச் சூழ்ந்து.

விரிந்துவீழ் கூந்தல் பாரார்

என்று தொடங்கிய பரபரப்பு, "விலகுங்கள், விலகுங்கள்" என்ற சத்தத்திலே உச்ச நிலையடைந்து, ராமனைக் கண்டதும்,

தேன் நுகர் அளியின்
மொய்த்தார்

என்ற நிசப்த நிலையில் முற்றுப் பெறுகின்றது.

* * *

'மானினம் வருவ போன்றும்' என்று தொடங்கும் இப்படலத்து முதலாவது பாட்டும், 'விரிந்துவீழ் கூந்தல் பாரார்' என்று தொடங்கும் இரண்டாவது பாட்டும், 'மொய்த்தார்' என்று ஒரே மாதிரி முடிவைக் கொண்டிருப்பது கவனிக்கத் தக்கது. இப் பாடல்கள் இரண்டும் 'ராமன்_பவனி வருதல்' (உலா இயல் படலம்) என்ற இந்த வசீகரமான படலத்திற்கு ஒரு வசீகரமான தோற்றுவாயாக அமைகின்றன.

முதலாவது காட்சியிலே தம்மை நன்றாக அலங்கரித்துக் கொண்டு வீதியிலும் உப்பரிகையிலும் அடக்கமாகவும் பெருமிதத்துடனும், 'பொம்மெனப் புகுந்து மொய்த்த' பெண்களைக் காட்டிவிட்டு, அடுத்த காட்சியில் பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளவும் நேரமில்லாமல் சிலர் செய்து கொண்ட சொற்ப அலங்காரமும் அலங்கோலமாகும்படி அவசர அவசரமாக வந்து மொய்க்கும் அந்தக் காட்சியையும் காட்டி விடுகிறான் கவிஞன்.

இவ்வளவு பரபரப்பாக வந்து மொய்த்தவர்கள் ராமனைப் பார்த்ததும் எப்படிப்பட்ட மன நிலையடைகிறார்கள்! — அடுத்த வாரம் பார்க்கலாமே.

65

பி. ஸ்ரீ.

93. சௌந்தரிய தாகம்

"காதல் என்பதைப் பார்க்க முடியுமா? அது ஓர் உணர்ச்சி தானே? இன்று பார்க்கிறோமே, என்ன பாக்கியம் பெற்றோம்!" என்று வந்து கூடி விட்டார்களாம் மிதிலைப் பெண்கள். "காதல் என்பது உணர்ச்சி மட்டுமன்று, அதற்கு ஓர் உருவமும் உண்டு" என்று சித்தாந்தம் செய்து விட்டார்கள்.

புருஷோத்தமனான ராமனைப் பார்த்ததும் ஒரு புருஷனைப் பார்ப்பது போலவே தோன்றவில்லையாம் அப்பெண்களுக்கு.

"கண்ணினால் காதல் என்னும்
பொருளையே காண்கின் றோம்! இப்
பெண்ணின்நீர் மையினால் எய்தும்
பயன்இன்று பெறுதும்" என்பார்.
மண்ணும்நீர் உலந்து வானும்
மழைஅற வறந்த காலத்(து),
உண்ணும்நீர் கண்டு வீழும்
உழைக்குலம் பலவும் ஒத்தார்.

223

354

[பொருள் — குணம்; உண்மைக் கருத்து. பெண்ணின் நீர்மை — பெண் தன்மை; பெண்மை. பெறுதும் — பெறுவோம். உலந்து — அழிந்து. வறந்த — வறண்ட. வீழும் — விரும்பி வந்து கூடும். உழைக்குலம் — மான் கூட்டம்.]

"இதுவரை ஒருவரும் கண்ணால் காணாத காதல் என்ற அந்தப் பொருளையே இன்று நாம் கண்முன் காண்கிறோம்; நாம் பெண்ணாகப் பிறந்ததால் பெறக்கூடிய பயனை இன்று பெறுவோம்" என்று எண்ணிக் கொண்டே வருகிறார்களாம்.

இந்த நிலையிலுள்ளவர்கள் நெருங்கி வந்து ராமனுடைய அழகை நோக்குவது எப்படி இருக்கிறது? தாகத்தால் தவிப்பவன் தண்ணீரைக் கண்டதுபோல் என்று சொல்லலாம். ஆனால் ராம ஸௌந்தரியத்தை இப்படிச் சொன்னால் போதாது என்ற கவிஞன் எண்ணுகிறான். பூமியில்

நீர் வற்றி வானமும் மழை பெய்யாமல் எங்கும் வறண்டு போன கால்த்திலே தாகத்திற்குத் தண்ணீர் கிடையாமல் தவித்துக் கொண்டிருக்கு மான்கள் ஓரிடத்தில் அருமையாகக் கிடைக்கிற நல்ல தண்ணீரை பார்த்து விட்டால், எவ்வளவு ஆசையோடு கூட்டங் கூட்டமாக வந்து விழும்! அப்படி வந்து கூடுகிறதாம் மிதிலைப் பெண்களின் கூட்டமும்.

இத்தகைய தாகத்துடன் தங்கள் ஹிருதயத்தில் மறைவாகவே வெளிப்படையாகவோ இருக்கும் காதலின் புறத் தோற்றமாகவே ராமனைக் காண்கிறார்களாம். தங்கள் அகக் காதலின் உண்மை-வடிவ தான் ராமன் என்று எண்ணுகிறார்களாம். யார் யார் எந்த எந்த அழகை காதலிக்கிறாரோ, அந்த அந்த அழகுகளெல்லாம் ராமனிடம் ஒருங்கே காட்சி தருகின்றன என்பதும், அழகு அல்லது காதலின் தத்துவமே ராமனாக வருகிறது என்பதும் குறிப்பு.

* * * *

அதோ அந்தக் கூட்டத்தில் ஓடி வருகிறார்களே, அந்தப் பெண்களைப் பாருங்கள். என்ன வேகம்! ஆ, என்ன ஆசை! அவர்களை அப்படி இழுத்து வரும் அந்த ஆகர்ஷண சக்தியைத்தான் என்ன என்பது?



பள்ளத்துப் பாயும் நன்னீர்
அனையவர் பானல் பூத்த
வெள்ளத்துப் பெரிய கண்ணார்
மென்சிலம்(பு) அலம்பு மென்பூத்
தள்ளத்தம் இடைகள் நோவத்
தமைவலித்(து), ''அவன்பால் செல்லும்
உள்ளத்தைப் பிடித்தும் நாமே''ன்(று)
ஓடுகின்றாரும் ஒத்தார்.

[அனையவர் – ஒத்தவர். பானல் – கருங்குவளைப் பூ. வெள்ளத்துப் பெரிய கண்ணார் – வெள்ளத்தைக் காட்டிலும் பெரிய கண்கள் என்று சொல்லத்தக்க

ணர்ச்சி நிறைந்த கண்களை யுடையவள். மென்சிலம்பு – மெல்லிய சிலம்புகள். அலம்பு - ஒலி செய்யும். மென் பூ – மெல்லிய பூவைப் போன்ற பாதங்கள். தள்ள – தள்ளாட. வலித்து - இழுத்து. பிடித்தும் – பிடிப்போம்.]

பள்ளத்திலே பாயும் தண்ணீர் போல, ராமனை நோக்கி ஓடி வருகிறார்களாம். 'நன்னீர் அனையவர்' என்பதால் புருஷோத்தமனை நோக்கி விழுந்து விழும் உள்ளம் நல்ல உள்ளம், சுத்தமான உள்ளம் என்பது குறிப்பு.

இப்படி அவர்கள் ஓடிவரும் போதே அந்தக் கண்கள் நீல மலர் போல மலர்ந்து பார்க்கின்றனவாம். ஆம், அழகிலும் மென்மையிலும், மலர்ச்சியிலும் குளிர்ச்சியிலும் நீல மலர்கள்தான். ஆனால் அந்த உணர்ச்சியின் வேகத்தையும் ஆழத்தையும் பரபரப்பையும் உணர்த்த வேண்டாமா? அதற்காகத்தான் 'வெள்ளத்துப் பெரிய கண்ணார்' என்கிறான் கவிஞன். நீலம் கடல்நீலத்தையும் ஞாபகப்படுத்துகிறது. அந்த நீலமலர்க் கண்களை 'நீலக்கடல் வெள்ளத்திலும் பெரிய கண்கள்' என்று சொல்லத் தோன்றுகிறது.

அவர்கள் அப்படி ஓடிவரும்போது அந்தக் காலழகையும் கவிஞன் 'மென்சிலம்பு அலம்பு மென்பூ' என்று ஒரு சப்த சித்திரமாக்கிக் காட்டுகிறான். இந்தச் சொற்றொடரைப் பாட்டோடு பாடி உச்சரித்துத் தான் இதன் அழகு முழுமையும் அனுபவிக்க முடியும்.

நீலமலர்போன்ற கண்கள் கடலினும் பெரிய கண்களாய் ஒளியலைகள் வீச, தாமரை போன்ற பாதங்கள் சிலம்பொலியுடன் தள்ளாட, இடைகள் நோவ ஓடி வருகிறார்கள். ஏன் இந்த ஓட்டம்? இப்படி உள்ளம்தான் இழுத்துக்கொண்டு முன்னே ஓடிவருகிறதாம். 'அந்த உள்ளத்தை நாம் பிடிப்போம்!' என்று அதைத்தொடர்ந்து ஓடி வருகிறவர்களைப் போல் வருகிறார்களாம்.



ராமனைக் காண வேண்டுமென்று மனோவேகமாக வருகிற ஆசையையும் ஆத்திரத்தையும் அழகையும் ஒருங்கே படம் பிடித்துக் காட்டும் அதிசயமான கவிதை.

ராமனைப் பற்றி ஏற்கெனவே
கேள்விப் பட்டிருந்தார்கள். அக
கைக்குச் சாபம் போக்கி அரு
செய்தான் என்று கேள்விப்ப
டிருந்தார்கள். சீதைக்காக வி
முறித்து அருள் செய்தான் எ
றும் தெரிந்து கொண்டிருக்கிற
கள். அந்தப் பெண்ணுக்கு அரு
செய்த அந்தத் திருவடிகளை
பார்க்க வேண்டாமா? தங்க
சீதைக்கு அருள் செய்த வீர
தோளையும் பார்க்க வேண்டியத
தானே? அந்தத் தாளையும் தோளை
யும் காண அவ்வளவு ஆத்திரமுப
வேண்டியது தானே:

355

அரத்தம் உன்(டு) அனைய
மேன
அகலிகைக்(கு) அளித்த
தாளும்
விரைக்கருங் குழலிக் காக
வில்லிற நிமிர்ந்து வீங்கு
வரைத்தடந் தோளும் காண
மறுகினின் வீழும் மாதர்
இரைத்துவந்(து) அமிழ்தின்
மொய்க்கு
ஈயினம் என்ன லானார்.

[அரத்தம் – செந்நிறம். உண்
அனைய – உட்கொண்டால்போன்ற
அளித்த – அருள் செய்த. தாள்
பாதம். விரை - வாசனை. கரு
குழலி - கருங் கூந்தலுடைய சீதை
வரை - மலை. தடந்தோள் - பெரி
தோள். மறுகு-வீதி. இரைத்து
ஒலித்து.]

பெண்கள் ராமனது வீரத்தை
யும் அருளையும் புகழ்ந்து கொண்
வந்தார்கள் என்றும் ஊகிக்கலாம்
அமிர்தத்தைப் பருக ஆரம்பித்தது
வண்டுகள் ரீங்காரத்தை நிறுத்தி
விடுவது போல், ராமாமிர்தத்தை
கண்களால் பருகத் தொடங்கி
தம் பேச்சை நிறுத்தி விடுகிறார்க
என்றும் ஊகம் செய்யலாம்.

பி. ஸ்ரீ.

94. காதல் காட்டும் ஜால வித்தை

மாளிகை வாசல்களிலும் மேல் மாடங்களிலும்—வீதியின் இருபுறமும்—மிதிலைப் பெண்கள் மொய்த்திருக்க, ராமனுடைய ரதம் போய்க்கொண்டிருக்கிறது. இமை கொட்டினாலும் அந்த அழகு மறைபடுமே என்று கண்களை மலர விழித்து இமையாது பார்த்துக் கொண்டேயிருக்கிறார்களாம், வீதி வழியே போகும் அந்த அதிசயத்தை. போகட்டும்; வீதி வழியாகத்தான் போகிறானா? அதுவும் ஒரு தோற்றம்தானா?

நடப்பதுதான் என்ன? ஆஹா, இப்படியும் நடக்க முடியுமா? இப்படியும் தேர் செல்ல முடியுமா? அந்த ரதத்தில் பூட்டிய அழகிய குதிரைகள் எப்படித் தாவித் தாவிப் போகின்றன!

> வீதிவாய்ச் செல்கின் றான்போல்,
>   விழித்திமை யாது நின்ற
> மாதரா கண்க ளூடே
>   வாவுமான் தேரில் செல்வான்,
> யாதினும் உயர்ந்த தன்னை
>   'யாவர்க்கும் கண்ணன்' என்றே
> ஓதிய பெயர்க்குத் தானே
>   உட்பொருள் உணர்த்தி விட்டான்.

[வீதிவாய் – தெருவில். வாவும் – தாவும். மான் (இங்கே)குதிரை.]

வீதி வழியாகச் செல்லுகிறவன் இப்போது இந்தப் பெண்களின் கண்கள் வழியாகச் செல்லுகிறானாம் தேரோடும், தாவிப் பாயும் அந்தக் குதிரைகளோடும். என்ன மயக்கம்! தான் மாத்திரம் அன்றித் தாவும் குதிரைகள் பூட்டிய அந்த ரதத்தோடும் கண்களூடே ஒரு வழி செய்து கொண்டு அந்த வழியே போவது போலத் தோன்றுகிறதாம்.

கண்ணன் என்பது சிறப்பாகக் கிருஷ்ணனுக்கும் பொதுவாகத் திருமாலுக்கும் தமிழில் வழங்கும் அருமையான பெயர். 'கருநிறமுடையவன்' 'யாவர் மனத்தையும் ஆகர்ஷிப்பவன்' என்று பொருள் படும் 'கிருஷ்ணன்' என்ற வடமொழிச் சொல் 'கண்ணன்' என்று தமிழில் மருவி வழங்குகிறது என்பர். இப் பெயரைத் தமிழாகவே கொண்டு, 'கண்ணைக் கொடுத்தவன்' 'அறிவுக் கண்ணை அளிப்பவன்' 'கண்ணோட்டமாகிய

அருமை உடையவன்' 'யாவருக்கும் கண்ணைப் போல் அருமையாய் இருப்பவன்' என்றெல்லாம் பொருள் சொல்வது முண்டு. இப்போது இந்த அருமைப் பெயருக்கு ஒரு நுட்பமான புதுமைப் பொருளும் கிடைத்திருக்கிறது. 'பெண்களின் கண் வழியே செல்லுகிறவன்' என்பதுதான் இந்த உட்பொருள் என்று அந்த ரதத்தில் போகும் கண்ணனே (ராமனே) உணர்த்தி விடுகிறானும். இப்படி ஒரு புதிய காரணம் கற்பித்துப் புதிய பொருள் ஒன்று கூறுவதுபோல் காதலின் ஜால வித்தை ஒன்றைக் காட்டுகிறான் கவிஞன்.

* * * *

ரதம் போய்க் கொண்டே யிருக்கிறது. ஊர்வலமாகப் போவதால் அதிவேகமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. ஆனால் 'தாவிப் போகும் குதிரை பூட்டிய அந்த ரதம் மனோவேகத்திலும் அதிவேகமாய்ப் போகிறதே! சிறிதும் தங்காமல் மேலும் மேலும் போய்க் கொண்டே யிருக்கிறதே!' என்று பெண்கள் வருந்தி மயங்குகிறார்களாம். இதுவும் காதலின் 'ஜகஜால' வித்தைகளில் ஒன்று:

'எண்கடந்து அல்கிலா(து) இன்று
 ஏகுறும் இவன்தேர்! என்று,
பெண்கள்தாம் தம்மில் நொந்து
 பேதுறு கின்ற காலை,
மண்கடந்(து) அமரர் வைகும்
 வான்கடந் தானைத் தாவ்தல்
கண்கட வாது காத்த
 காரிகை பெரியளே காண்!

[எண்—எண்ணம். அல்கிலாது—தங்காமல். ஏகுறும்—செல்லாநிற்கும். பேதுறுகின்ற காலை — மயங்குகின்றபோது. அமரர்—தேவர். வைகும்—வசிக்கும். காரிகை—அழகுடைய சிறந்த பெண்; (இங்கே) சீதை.]

"ஐயோ, இன்னும் நீடித்துக் காட்சி யளித்தானில்லையே! கண் கடந்து போய்க் கொண்டிருக்கிறானே!" என்று பெண்கள் மயங்கி நிற்க, ஒரு பெண் அவனைக் கண்ட அந்த க்ஷணமே தன் கண்ணை அவன் கடந்து போகாமல் சிறை செய்து காவல் செய்து கொண்டாளாம். அப்படி ராமனைக் கட்டிக் காவலில் வைத்த சீதையின் பெருமையே பெருமை என்பது கவிக் கூற்று.

'வேகமாகச் சென்று பார்வைக்கு எட்டாத தூரம் போய்விட்டானே!' என்று பெண்கள் நினைக்கிற ராமனை,

மண்கடந்(து) அமரர் வைகும்
 வான் கடந் தானை

என்று சுட்டிக் காட்டுகிறான் கவிஞன். ஈரடியில் மண்ணுலகம் தாண்டி வானையும் தாண்டிய அந்தத் திரிவிக்கிரமாவதாரத்தை—அதாவது ராமாவதாரத்திற்கு முந்திய அவதாரத்தை — ஞாபகப்படுத்துகிறான். நினைக்கு முன்னே மூன்று லோகத்தையும் கடக்க வல்லவன் மிதிலைப் பெண்களின்

...

குறிப்பு.

ராமனையே பார்த்துக் கொண்டிருக்கும் அந்தக் கண்களின் ஜாலப் பார்வையைத் தான் என்னென்பது? அவற்றைப் 'படை நெடுங் கண்கள்' என்கிறான் கவிஞன். என்ன படை, என்ன போராட்டம்! அந்த நெடுங் கண்களின் கருமையைத் தான் என்னென்பது? "அக் கருங் கண்கள் நீல ஜோதியாகிய ராமனது மேனி ஒளியிலே தோய்ந்துதான் அவ்வளவு கருமையாகி விட்டனவோ? அல்லது, அவர்களின் அந்தப் 'படை நெடுங் கண்க'ளின் ஒளி பாய்ந்துதான் இந்த மேனி இப்படியாகி விட்டதோ? ஒன்றும் தெரிய வில்லையே?" என்று அதிசயத்துடன் அந்தக் காட்சியைக் கவிஞன் காட்ட, அது அப்படியே நம் கண்முன்பு வந்து விடுகிறது:—

பஞ்சணி விரலி னார்தம்
　　படைநெடுங் கண்கள் எல்லாம்
செஞ்செவே ஐயன் மெய்யின்
　　கருமையைச் சேர்ந்த வோதான்?
அஞ்சன மேனி யான்தன்
　　அணிநிறம் மாத ரார்தம்
அஞ்சன நோக்கம் போர்க்க
　　இருண்டதோ? அறிகி லேமால்!

[பஞ்சணி — செம்பஞ்சுக் குழம்பு அணிந்த. படை — சேனை, ஆயுதம். செஞ்செவே—மிகவும் செவ்வையாக. மெய் — மேனி. அஞ்சன மேனியான் — மை நிறத்தையுடைய ராமன். அணி நிறம்—அழகிய நிறம். அஞ்சன நோக்கம் — மை தீட்டிய கண்களின் பார்வை. போர்க்க—போர்வை போல் மூட. அறிகிலேம் — அறிகின்றோ மில்லை.]

அந்தப் 'படை நெடுங் கண்கள்' இந்த அஞ்சன



மேனியில் ஊன்றிப் பதிந்து விட்டனவாம். அப்படி ஈடுபட்டுப் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள் பெண்கள் யாவரும். "அதனால்தான் இந்த அஞ்சன மேனி அணிந்திருக்கும் திருநிறம் அந்த அஞ்சனம் தீட்டிய கண்களுக்கும் அப்படியே வந்து விட்டதோ? அல்லது, அந்த அஞ்சன நோக்கமே போர்வையாகி இந்த மேனியைப் போர்த்துத் தன்னிறமாக்கிக் கொண்டதோ?" என்று அதிசயிக்கிறான் கவிஞன்.

* * *

இனி அந்தப் பெண்கள் கூட்டத்தில் ஒருத்தியைச் சுட்டிக் காட்டுகிறான். ஏதோ ஒரு போர்க்களத்தில் நிற்பது போலிருக்கும் அவளுடைய அவஸ்தையைத்தான் என்னென்பது?

மாந்தளிர் மேனி யாள்ஓர்
  வாள்நுதல், மதனன் எங்கும்
பூந்துணர் வாளி மாரி
  பொழிகின்ற பூசல் நோக்கி,
"வேந்தர்கோன் ஆணை நோக்கான்,
  வீரன்வில் ஆண்மை பாரான்;
ஏந்திழை யாரை எய்வான்
  யாவனோ ஒருவன்?" என்றாள்.

[வாள்நுதல் — ஒளிபொருந்திய நெற்றியை உடையவள். மதனன் — மன்மதன். பூந்துணர் — பூங்கொத்து. வாளி; மாரி — அம்புமழை. பூசல் — போர். வேந்தர்கோன் — (இங்கே) ஜனக மகாராஜா. ஏந்திழையார் — பெண்கள்.]

'மாந்தளிர் போன்ற சிவந்த மெல்லிய மேனியாச்சே!' என்னும் இரக்கமில்லையாம் மன்மதனுக்கு. அந்த அழகுக்கும் அனுதாபமில்லையாம். சரமாரி பொழிந்து போர் புரிகிறானாம். இந்த நிலையில் அப்பெண், "என்ன? எளியாரை வலியார் நலியாது காக்கும் ஜனக மகாராஜாவின் ஆணையையும் நோக்கவில்லை; சுத்த வீரனான ராமனது வில்லாண்மையையும் பார்க்க வில்லை! அச்சமில்லாமல், நாணமில்லாமல், இரக்கமில்லாமல் அபலைகள் மீது அம்பு போடுகிறானே, இந்தப் போர்வீரன் யாரோ?" என்று மன்மதனுக்காகத் தான் வெட்கப்படுவது போலத் தனக்குள் தானே பேசிக் கொள்கிறாள். ஆம்! கவிஞன் காதில் விழும்படி — அதனால் நம் காதிலும் விழும்படியே!



ஒருவர் :— "நீங்கதான் திரும்பி போகப் போறதில்லையே! 'ரிட்டர்ன்' டிக்கெட்டைப் போய் ஏன் வாங்கிக்கிட்டு வந்தீங்க!"

மற்றவர் :— "யாரோ மலிவுன்னுங்களே!"

சித்திர ராமாயணம்

சித்திர விசித்திரங்கள் 69

பி. ஸ்ரீ.

227

95. சித்திரம் பரவசமாகிறது!

"அதோ ஒரு சித்திரம்—ஆளுயரம், தத்ரூபம், பொன்னிறம்; ஆபரணங்களெல்லாம் நழுவி விழுந்திருப்பதாய்க் காட்டியிருக்கிறது; அந்தச் சித்திரப் பட்டாடை போதாதா, அழகை எடுத்துக் காட்டுவதற்கு?" என்றெல்லாம் ஆலோசிக்கிறோம். "ராமன் பவனி வரும் வீதியில் அழகு பெற அமைத்திருக்கும் அந்த உயிர்ச் சித்திரம்—ஓஹோ! சித்திரமில்லையா? பெண்மணிதானா அவ்வளவு பரவசமாய் நிற்கிறாள்?" என்று அடுத்த க்ஷணமே பிரமித்துப் போகிறோம்.

நிபுணனான சித்திரகாரன் எழுதி வைத்த சித்திரம் போல் நின்று கொண்டிருக்கும் அவள் நிலையைத்தான் சற்றுக் கவனிக்கலாமே:

சொன்னலம் கடந்த காமச்
 சுவையையோர் உருவ மாக்கி,
இன்னலம் தெரிய, வல்லான்
 எழுதிய தென்ன நின்றாள்,
பொன்னையும் பொருவு நீராள்,
 புனைந்தன எல்லாம் போகத்
தன்னையும் தாங்க லாதாள்,
 துகிலொன்றும் தாங்கி நின்றாள்.

[சொன்னலம் – சொல் நலம். இன்னலம் - இனிமை கூடிய அழகு. தெரிய - தெரியும்படி. வல்லான் – நிபுணனான சித்திரிகன். பொருவு - ஒக்கும். நீராள் – நீர்மை அல்லது தன்மை வாய்ந்தவள். துகில் – ஆடை.]

சொல்லின் நலங்களையெல்லாம், சாமர்த்தியங்களையெல்லாம் கடந்ததல்லவா காதல்? அந்தக் காதற் சுவையையே ஓர் உருவமாக்கி வல்லவன் எழுதி வைத்த சித்திரம் போல நிற்கிறாளாம். "இனிமை வாய்ந்த அழகு இதுதான்!" என்று தெரியும்படி எழுதிய சித்திரம் என்ன நிற்கிறானாம்.

ராமனைக் கண்ட பரவசந்தான் இவளை இப்படி ஒரு சித்திரமாக்கி விட்டது. அதே பரவசத்தால் அணிந்திருந்த ஆபரணங்களும் நெகிழ்ந்து நீங்கத் தன்னையே தாங்கி நிற்க மாட்டாதவள் போல நிற்கிறாள்.

தன்னையும் தாங்க லாதாள்
துகிலொன்றும் தாங்கி நின்ருள்.

என்ற கூறும் கவிதைப் பகுதி சொல் நலம் கடந்த நயம் வாய்ந்தது.

பரவசம் பைத்தியமாகிறது!

அதோ வேறு ஒருத்தி பவனி வரும் ராமன் மீது எப்படி ஏகாக்ர சித்தமாகிவிட்டாள் பாருங்கள்! ராமனை யன்றி வேருென்றையும் பார்க்க முடியவில்லை இந்தப் பரவச நிலையிலே. ராமனைக் கண்ட கண்கள் வேருெரு பொருளையும் காண முடிய வில்லையாம். ஆம், அவனுடன் போகும் நால்வகைச் சேனை முதலிய வைபவங்களில் ஒன்றையும் இவள் கண்டாளில்லை, ‘இவன் தனியனுக வருவானேன்?’ என்று தான் தவிக்கிருளாம்.

என்ன தனிமை, என்ன இரக்கம், என்ன கவலை!

வில்தங்கு புருவம் நெற்றி
வெயர்வரப் பசலை விம்மச்
சுற்(று)எங்கும் எறிப்ப உள்ளம்
சோர,ஓர் தோகை நின்ருள்;
கொற்றம்செய் கொலைவேல் என்னக்
கூற்றெனக் கொடிய கண்ணுள்,
மற்றென்றும் காண்கி லாதாள்,
‘தமியனோ வள்ளல்?’ என்ருள்.

[வில் தங்கு - வில்லின் தன்மை பொருந்திய. வெயர் - வியர்வை. பசலை - வெளிறிப்போன நிறம். விம்ம - நிறைய; மிகுதியாக. சுற்று எங்கும் - சுற்றிடம் எங்கும். எறிப்ப - விளங்க. கொற்றம் - வெற்றி. கூற்று - எமன். தமியன் - தனியன்.]

கொடிய வேலாயுதம் போல், எமன் போல் அமைந்த கொலைக் கண் களோடு மயில் போலும் சாயலுடையவள். அப் பெண்மணி ராமனைப் பார்க்கிருளாம். அந்தக் கண்களிலேதான் என்ன கொடிய ஏகாக்ர சித்தம்! போர்புரிய வளைந்த வில்லைப் போன்ற புருவத்திலும் நெற்றியிலும் வேர்வைத் துளிகள். அத்தகைய ஏகாக்ர சித்தத்திஞல் சோர்ந்து போன உள்ளம் உடம்பின் நிறத்தையும் பாதித்து விட்டது போலத் தோன்று கிறது. இந்த நிலையில், ‘தன்னந் தனியனோ வள்ளல்?’ என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்கிருள். அந்தக் கேள்வியிலே தான் எவ்வளவு இரக்கம் தொனிக்கிறது! பாவம், அந்தத் தனிமைக்காகத்தான் எவ்வளவு கவலை!

அவ்வளவு அழகையும் இவள் கண்ணுரக் கண்டு களிக்கும்படி ராமன் தானே கருணை கூர்ந்து தனக்காகவே வீதி வழி வந்து உபகரித்தருளி ஞன்!—என்ற இவள் கருதுவது போலத் தோன்றுகிறது. அதஞல் தான் அவனை ‘வள்ளல்’ என்ற குறிப்பிடுகிருள் போலும்!

பைத்தியம் முற்றுகிறது!

அதோ இன்னொருத்தி — அவளுடைய காதற் பைத்தியம் இன்னும் எவ்வளவோ அதிகரிக்கிறது. ராமனைக் கண்ட கண்களைக் கைகளால் இறுகப் பொத்திக் கொள்கிறாள். பிறகு தோழியைக் கூப்பிடுகிறாள். ஏன்?

மைக்கருங் கூந்தல்—செவ்வாய்
வாள்நுதல் ஒருத்தி, உள்ளம்
நெக்கென உருகு கின்றாள்,
"நெஞ்சிடை வஞ்சன் வந்து
புக்கனன்; போகா வண்ணம்
கண்ணெனும் புலங்கொள் வாயில்
சிக்கென அடைத்தேன் தோழி!
சேருதும் அமளி!" என்றாள்.

[மை - மேகம். செவ்வாய் - சிவந்த வாய். வாள் - ஒளி. நுதல் - நெற்றி. நெக்கென - நெகிழ்ந்ததாக. சேருதும் - அடைவோம். புலம் - இந்திரியம். புக்கனன் - புகுந்தனன். வாயில்-வாசல். அமளி- படுக்கை.]

"கண் வழி நுழைந்த கள்வன் வெளியே தப்பிப் போகாதபடி அவன் நுழைந்த வாசலைச் சிக்கென அடைத்து விட்டேன்!" என்கிறாள். கண்களைச் சிக்கென



மூடிக் கொண்டு தோழியைக்
பிடுகிறாள். "அம்மா! நீ தான்
யைப் பிடித்துக்கொண்டு பே
அமளியில் சேர்க்க வேண்டும்"
பது குறிப்பு.

'சேருதும் அமளி' (படுக்கை
அடைவோம்) என்பதால், தலை
யின் சுகதுக்கங்களில் தோழிக்
பங்குண்டு என்பதும் குறிப்பு. ஆ
பைத்தியத்திலும் பல ரகம்; காத
பைத்தியத்திலும் அப்படித்தானே

முற்றிப் பொறாமையாகிறது

இன்னும் ஒருத்தி மற்றப் பெ
கள் ராமனை நோக்குவதைக் கண்
சகிக்க முடியவில்லையாம். பொற
மையால் அவர்களை நெருப்பெழ
பார்க்கிறாள் :

ஆக்கிய பாவை
அன்னாள்
ஒருத்திஆண்(டு)
அமலன் மேனி
நோக்குறு வாரை
யெல்லாம்
எரியெழ நோக்கு
கின்றாள்!

[ஆக்கிய – அருமையாகச் செ
யப்பட்ட. அன்னாள் – ஒத்தவள்
ஆண்டு - அங்கே. அமலன் – குற்
மற்ற ராமன். நோக்குறுவாரை
அன்போடு பார்ப்பவர்களை. எ
யெழ – நெருப்புப் பறக்க.]

ஏதோ ஒரு தங்கப் பதுமை போ
லவோ, தந்தப் பதுமை போலவோ
நின்றுகொண்டிருக்கிறாளாம். இவ
ராமனையும் பார்க்கிறாள், தன்னைப்
போன்ற மற்றப் பெண்களையும்
பார்க்கிறாள். அந்த இரண்டு பா
வைகளுக்கிடையேதான் எவ்வள
வித்தியாசம்!

* * *

இத்தகைய கவிச் சித்திரங்கள்
காதலர்களின் விசித்திர விசித்திர
மான மனநிலைகளை எவ்வளவு நன்
றாய் வெளியிடுகிறது!

ஸ்ரீ ராமாயணம்

பி. ஸ்ரீ.

96. வந்ததும் போனதும்

அந்தக் கண்ணிலே தான் என்ன களிப்பு, என்ன செருக்கு! அந்தக் கண்களின் ஆழம் போல் நீளமும் அதிசயமாகவே யிருக்கிறது. எவ்வளவு கள்ளத்தை ஒளித்து வைத்திருக்கின்றன! ஒரு சமயம் அக் கண்கள் முகத்தினின்றும் குதித்து ஓடத்தான் பார்க்கின்றனவோ?-என்று தோன்றுகிறது. சிவப்பு, வெளுப்பு கறுப்பு என்ற நிறபேதங்கள் அக் கண்களிலே தோன்றுவதற்குத் தான் என்ன காரணம்? போகட்டும்: அவள் ஏன் திடீரென்று மாளிகைக் குள்ளே போய் விடுகிறாள்?

களிப்பன, மதர்ப்ப, நீண்டு
கதுப்பினை அளப்ப, கள்ளம்
ஒளிப்பன, வெளிப்பட்(டு) ஓடப்
பார்ப்பன, சிவப்(பு) உள்ளூற
வெளுப்பன, கறுப்ப வான
வேற்கணாள் ஒருத்தி, உள்ளம்
குளிர்ப்பொடு காண வந்தாள்;
வெதுப்பொடு கோயில் புக்காள்.

[களிப்பன — கள்வெறி போன்ற மகிழ்ச்சியைக் காட்டுவன. மதர்ப்ப — செருக்கைக் காட்டுவன. கதுப்பு — கன்னம். சிவப்பு — (இங்கே) சிவப்பு ரேகைகளைக் குறிக்கும். ஊற — பொருந்த. வேற்கணாள் — வேல் போன்ற கண்ணையுடையவள். கோயில் — வீடு.]

கண்களிலேயே ஒரு காதல் நாடகம் .பாட்டின் மூன்று அடிகளாலும் நாடகத்தை நடத்திக் கொண்டே வந்து பளிச்சென்று அந்த 'வேற்கணாள்',

குளிர்ப்பொடு காண வந்தாள்;
வெதுப்பொடு கோயில் புக்காள்.

என்று பாட்டின் முக்கியமான கருத்தை முடித்துக் காட்டுவது சாதுரிய மாக மட்டுமில்லை, அதிசயமாகவே யிருக்கிறது.

ராமனை எப்படி யெல்லாம் — எத்தகைய உணர்ச்சிகளோ டெல்லாம் — பார்க்கிறாள்! ஒரு சமயம் கள் வெறி கொண்ட உள்ளம் பிரதிபலிக்கிறது பார்வையில். ஒரு சமயம் செருக்கும் செழிப்பும் 'என்ன

பாக்கியம் பெற்ளேம்!' என்ற எக்களிப்பை வெளியிடுகின்றன. ஒரு சமயம் விரிந்து மலர்ந்த பார்வை; பிறகு நீண்டு திமிர்ந்த பார்வை. ஒரு சமயம் கள்ளப் பார்வை; பிறகு கள்ளத்தை ஒளிக்கும் பார்வை. கள்ளம் ஒளிப்பது என்றால், 'ராமன் மீது இவளுக்கு இவ்வளவு பிரியமா?' என்ற பிறர் தெரிந்து கொள்ளாதபடி மறைக்கும் அந்தப் பார்வை தான்.



இப்படி வர்ணித்துக் கொண்டே வரும் கவிஞன், "ராமன் தேர் போய்க் கொண்டேயிருக்கிறது, இவளும் பார்த்துக் கொண்டேயிருக்கிருள்" என்பதையும் இந்தக் கண்களின் காதல் நாடகத்திலேயே காட்டவேண்டுமென்று, "வெளிப்பட்டு ஓடப் பார்ப்பன" என்று கண்களை வருணிக்கிருன். இந்தக் கண்கள் தம் 'குழி'யிலிருந்து வெளிப்பட்டு ராமனேடு ஓடப் பார்க்கின்றனவாம்.

பிறகு தோழிகள் இத் தலைவியைப் பார்க்கிருர்கள். அந்த அழகிய சிவந்த ரேகைகளோடு கூடிய கண்கள், கருவிழிகூடத் தோன்ருமல் ஒரே வெளுப்பாகக் காண்கின்றனவாம். அந்த வெண்மை கள்ளங் கவடற்ற சுத்தமான பார்வைக்கு அறிகுறியா? அல்லது அவ்வளவு ஏகாக்ர சித்தத்தின் ஸ்தைர்ய நிலையைத் தான் குறிக்கிறதா?

கடைசியாக வழக்கம் போலக் களிந்த கருவிழி தான் — கருத்துப் புதையலை உள்ளத்தின் ஆழத்திலே வெளிப்படாமல் புதைத்துவிட்ட நிலை தான்.

'கண்ணிலே மிதந்த கவிதை சொல்லிலே தேங்கிவிட்டது' என்று தான் சொல்லவேண்டும்.

இப்படி யெல்லாம் ராம ஸௌந்தர்யத்தைக் கண்டு மோகித்த போனவர்கள் அந்த வடிவழகு முழுவதையும் பார்த்தார்களா? அதுதான் இல்லை என்கிருன் கவிஞன் :

தோள்கண்டார் தோளே கண்டார்;
தொடுகழல் - கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்;
தடக்கைகண் டாரும் அஃதே:
வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத்(து) அன்னான்
உருவுகண் டாரை ஒத்தார்.

[தொடு கழல் — அணிந்த வீரக்கழல். அன்ன — ஒத்த. தாள் — திருவடி. தடக்கை — பெரிய கை. அஃதே — அதுவே; அப்படியே. வாள் கொண்ட — வாளை ஒத்த. ஊழ் — முறை, குணம். சமயத்து — சமயங்களில். அன்னான் — அந்தக் கடவுள்.]

வில் முறித்த தோளைக் கண்டவர்கள் தோளழகில் ஈடுபட்டு அந்த அழகையே நோக்கிக் கொண்டிருக்கிறார்களாம். அகலிகைக்கு அருள் புரிந்த திருவடியைக் கண்டவர்கள் அந்தத் தாளழகையே நோக்கிக் கொண்டிருக்கிறார்களாம். கையழகைக் கண்டவர்களும் அப்படியே. அந்தப் பெண்களில் யாரே அந்த வடிவை முடியக் கண்டார்? எனினும் அவரவர் கண்ட அழகே அழகென்று நினைத்து விட்டார்கள். யானை கண்ட குருடர் போலே,—தத்தம் மதங்களிலேயே பரம் பொருளின் முழு வடிவையும் கண்டு விட்டோம் என்ற சமயவாதிகள் போலே! என்ன சமய உணர்ச்சி! என்ன அழகுக் காதல்! இது கம்பன் கண்ட - மிதிலைப் பெண்கள் ராமனைக் கண்ட காட்சியிலே மிதந்து வந்த - சர்வ சமய சமரஸ ஸௌந்தர்ய தரிசனம்.



ஒருத்தி அதீத உணர்ச்சி-நலம் வாய்ந்தவள். தானே அழகு ராணி யென்று இறுமாந்திருப்பவள். எத்தனையோ நெஞ்சங்களைச் சூறையாடி வாகை சூடினவள். அந்த அழகால் இன்றும் வெற்றி பெறலாம்

என்ற பெரு நம்பிக்கையோடு வந்தவள்தான். அவளுக்குப் பின் தோழிகளும் வருகிறார்கள். அவள் நடையில்தான் என்ன கம்பீரம் என்ன உல்லாஸம்!

அலம்பு பாரக்
குழலிஓர் ஆயிழை,
சிலம்பும் மேகலை
365 யும்மொலி செய்திட,
நலம்பெய் கொம்பின்
நடந்துவந் தெய்தினள்.

[அலம்பு - அசைகிற. குழலி – கூந்தலையுடையவள். ஓர் ஆயிழை – ஒரு பெண். நலம்–அழகு. கொம்பின் – பூங்கொம்பு போல.]

என்று இவள் வருகையை அறிவிக்கும் கவிஞன், ராமனைக் கண்ட பின் இவள் அடைந்த நிலையைக் கடைசி அடியாகிய ஒரே சிறு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுகிறான்:

புலம்பு சேடியர்
கைம்மிசைப் போயினள்.

[சேடியர் – தோழியர்.]

அழகின் அதிகாரத்துடனும் ஆடம்பரத்துடனும் வந்தவள் ராமனைக் கண்டபின், புலம்பிக்கொண்டிருக்கிற தோழியர்களது ஆதரவிலே செல்லுகிறாளாம். இரண்டு பக்கத்திலும் தோழியர் கை கொடுத்துத் தாங்க வீட்டுக்குள்ளே போகிறாள் என்பது கருத்து.

இவள் ராமனைக் காண்பதையும், உணர்ச்சி மிகுதியால் வசமிழந்து மூர்ச்சையாவதையும், அதைக் கண்டு "ஐயோ! நம்முடைய தலைவிக்கு என்ன ஆகுமோ" என்ற தோழியர் வருந்துவதையும் வெளிப்படையாகச் சொல்லாமல் நமது ஊகத்துக்கே விட்டு விடுகிறான் கவிஞன்.

ஸ்ரீ ராமாயணம்

73

பி. ஸ்ரீ.

97. அன்புப் பைத்தியம்

231

காதலா, கல்வியா?

'கண்டதும் காதல்' என்று கேட்டிருக்கிறோம். 'கேட்டதும் தல்' என்று கூடக் கேட்டிருக்கிறோம். ஆனால் இவள், பெயரைக் ட்டே மோகித்துப் போனாள். அந்த நாமத்தைத் திரும்பத் திரும்பச் சால்லிய வண்ணம் மனம் அழிந்து நிற்கிறாள். இந்த நிலையில், ராமன் ல்லிறுத்த வெற்றி காதலின் வெற்றி என்பதைக் கூட மறுக்கத் துணி றாளாம். ராமனுக்குச் சீதையிடத்திலும் காதல் இருக்க முடியாது ன்பது இவள் சித்தாந்தம்.

"சிபிச் சக்ரவர்த்தியின் வம்சத்திலே பிறந்தான். அந்தச் சக்ரவர்த்தி ரு பறவைக்காகவும் தன் இன்னுயிரை வழங்கத் துணிந்த வள்ளல். மனோ எங்கள் இன்னுயிரை எங்களுக்கே கொடுக்க மாட்டேன் என் றன்! இவ்வளவு கொடுமை யுள்ளவனுக்குக் காதலே இருக்க முடியாது. பின், எதற்காக வில்லை முறித்தான்? தன் வில்வித்தையை, வில்லின் வியைக் காட்டுவதற்காகத்தான்!" என்றெல்லாம் சித்தாந்தம் செய் இப் பெண்மணியைப் பாருங்கள்:

நாமத்தால் அழி
 வாள்ஒரு நன்னுதல்,
"சேமத் தார்வில்
 இறுத்தது, தேருங்கால்,
தூமத் தார்குழல்
 தூமொழித் தோகைபால்
காமத் தால்அன்று;
 கல்வியி னால்!" என்றாள்.

[நாமம் - பெயர். நன்னுதல் – அழகிய நெற்றியை உடைய பெண். மத்து ஆர் வில் - காவலுள்ள இடத்தில் தங்கிய வில். தேருங்கால் – லோசிக்குமிடத்து. தூமத்து ஆர் குழல் - அகிற்புகை ஊட்டிய கூந்தல். மொழி – சுத்தமான பேச்சு. தோகை – மயில்போலும் சாயலுள்ள த. காமம் – காதல். கல்வி - வில்லின் கல்வி.]

ராமன் வில் முறித்த வெற்றி காதலின் வெற்றி என்பது கம்பனுடைய சித்தாந்தம். அந்தச் சித்தாந்தத்தை மறுப்பது போல அமைந்திருக்கிறது இப் பாட்டு. காமப் பித்தம் கொண்டு ராமனை நொந்து கொள்ளும் ஒரு பெண் வாயிலாகத் தன்னுடைய சித்தாந்தத்தை மறுப்பதுபோல வலியுறுத்தும் சாதுரியம் கவனிக்கத் தக்கது.

என்ன அழகு! என்ன பணிவு!

மேலே சொன்னபடியெல்லாம் மிதிலைமா நகரம் ராமனைக் கண்டு காதலிலே மூழ்கிக் கிடக்க, இக் காதலன் தன் காதலியாகிய சீதையை நினைத்துக் கொண்டே, அரசர் கூட்டம் புடை சூழத் தம்பியரோடு போய் ஜனக மகாராஜாவின் சபா மண்டபத்தை அடைகிறான். அங்கே, வசிஷ்ட விசுவாமித்திர மகரிஷிகளான இரண்டு ஆசாரியர்களும் ராமன் வரவை எதிர் நோக்கி யிருக்கிறார்கள். அவர்களை ராமன் வணங்கும் அழகு பணிவையும் அழகையுந்தான் பாருங்கள்:

திருவின் நாயகன்,
மின்திரிந் தாலெனத்
துருவில் மாமணி
ஆரம் துயல்வரப்,
பருவ மேகம்
படிந்தது போல்படிந்(து)
இருவர் தாளும்
முறையின் இறைஞ்சினன்.

[திருவின் நாயகன் - ராமன். மின் - மின்னல். துருவில் - குற்றமில்லாத. துயல்வர - அசைந்து புரள. தாள் - திருவடி. இறைஞ்சினன் - வணங்கினன்.]

ராமன் வணங்கும் போது மார்பிலே ரத்தினஹாரம் மின்னல் திரிவது போல அசைந்து புரளுகிறதாம். நீருண்ட நீலமேகம் நிலத்திலே வந்து படிந்தாற் போலத் தாழ்ந்து வணங்குகிறான். 'என்ன வசீகரமான அழகு! ஆ, என்ன பெரும் பணிவு!' என்று அந்த முனிவர்களும் பிரமிக்கிறார்கள் — என்பது குறிப்பு.

ராமனைத் 'திருவின் நாயகன்' என்று குறிப்பிடுவது, 'சீதா கல்யாணம் வந்து விட்டது, நிச்சய தாம்பூலம் ஆகவேண்டியதுதான்' என்று கம்பனுடைய ஆத்திரத்தைக் காட்டுகிறது எனலாம். ஆனால், விசுவாமித்திரர் வேள்வி செய்த காலத்திலேயே 'திருமகள் நாயகன்' என்று கவிஞன் குறிப்பிடுகிறான். விசுவாமித்திரரிடம் அடைக்கலமாக ஒப்புவிக்கும் சமயத்திலும் ராமனைத் தசரதன் 'திருவின் கேள்வன்' என்கிறான். கம்பன் தன்னுடைய காவிய நாயகனை ராமன் என்று கருதாமல் 'சீதாராமன்' என்றே கருதியிருக்க வேண்டும்.

சக்ரவர்த்தியின் மாட்சியும் புகழும்

ஆசாரியர்களிடம் ஆசிபெற்று ராமன் தம்பியரோடு ஆசனத்தில் அமர்ந்ததும், தசரதனும் தன் சுற்றத்தாருடன் அங்கே வந்து சேர்ந்தான்

வனும் வசிஷ்ட விசுவாமித்திரர்களை வணங்கித் தனக்குரிய ஆசனத்தில் ற்றிருந்தான். அந்த மாட்சியைக் காட்டும் கவிதையும் உயர்ந்த ரகத் தச் சேர்ந்தது:

வந்து மாதவர்
 பாதம் வணங்கி,மேல்
சிந்து தேமலர்
 மாரி சிறந்திட,
அந்த ணாளர்கள்
 ஆசியொ(டு), ஆசனம்,
இந்திரன் முக(ம்)
 நாணுற, ஏறினான்.

232
74
368

மாதவர் - மகரிஷிகள். மேல் - தன்மேல். தேமலர் - இனிய . மாரி - மழை. சிறந்திட - மிகுதியாகப் பொழிய. நாணுற - ம் அடையும்படி.]

சரத சக்ரவர்த்தி ஆசனத்தில் ஏறியதும் மூன்று நிகழ்ச்சிகள் க நிகழ்ந்தனவாம். சபையிலுள்ள பலரும் ஒருமுகமாகப் பூமாரி ர்தார்கள், அந்தணர்கள் ஒருமுகமாக ஆசி பொழிந்தார்கள். இதே சமயத்தில் இந்திரன் முகத்தைப் பார்க்க வேணுமே! தசரதன் கம்பீரமாக ஆசனம் ஏற, அந்த முகம் அப்படியே இறங்கிக் கவிழ்ந்து வெட்கத்தால் தொங்கிப் போயிற்றாம்.



சக்ரவர்த்திக்குச் சாமரம் வீசும் அந்த அழகையும், அது எடுத்துக் காட்டும் அந்த மாட்சியையும் தான் என்னென்பது?

தீங்க ரும்பினும்
    தித்திக்கும் இவ்சொலார்,
தாங்கு சாமரை
    மாடு தயங்குவ,
369 ஓங்கி ஓங்கி
    வளர்ந்துயர் கீர்த்தியின்
பூங்கொ ழுந்து
    படர்வன போன்றவே!

[தீங்கரும்பினும் - இனிப்பான கரும்பைக் காட்டிலும். மாடு - பக்கத்தில். தயங்குவ - விளங்கும் அவை.]

அந்த வெண்சாமரங்கள் பக்கங்களிலே படர்வது சக்ரவர்த்தியின் ஓங்கி ஓங்கி வளர்ந்து உயரும் புகழின் பூங்கொழுந்து படர்வது போலிருக்கிறதாம். ஒவ்வொரு கீர்த்திச் செயலும் சிறிது காலம் ஓங்கி வளர்ந்த பிறகு மதிப்பில் இறங்கிவிடும். தசரதனோ அடிக்கடி கீர்த்திச் செயல்களைச் செய்த வண்ணம் இருப்பதால், ஒரு புகழ் இறங்க வேறொரு புகழ் வளர்ந்து உயர்ந்து படர்ந்து கொண்டேயிருக்கிறதாம்.

* * *

ஜனக மன்னன் யாவரையும் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று வித்தியாசம் பாராட்டாமல் உபசரித்தான். எவ்வளவு அன்புடன் உபசரித்தான், தெரியுமா? அந்த "அன்புதான் இழிந்துளார்க்கும் இராமற்கும் ஒத்ததே!" என்கிறான் கவிஞன். ராமனை எவ்வளவு அன்புடன் உபசரித்தானோ, அவ்வளவு அன்பிற்கும் சிறிதும் குறையாமல் 'தாழ்ந்தவர்'களையும் உபசரித்தானாம். என்? மாப்பிள்ளையிடம் பரிபூர்ண அன்பு மாமனுக்கு; பரிபூர்ண அன்பிற்கும் அதிகமாக அன்பு செய்வதென்பது சாத்தியமா?— என்பது குறிப்பு.

பி. ஸ்ரீ.

98. “அழகெலாம் ஒருங்கே கண்டால்....”

தசரத சக்ரவர்த்தி சிங்காசனத்தில் வீற்றிருந்தபோது வசிஷ்டர் ஜனக மன்னனை நோக்கி, ‘நிச்சயதாம்பூலத்திற்குச் சீதையை வரவழைப் பாயாக’ என்ருர். அவன் அருகே நின்ற பணிப் பெண்களை ஏவினன். அவர்கள் போய்ச் சீதையின் தோழிகளிடம் செய்தி சொன்னர்கள். அவர்கள் உடனே சீதையை அலங்கரிக்கலானர்கள் :

அமிழ்இமைத் துணைகள் கண்ணுக்(கு)
அணியென அமைக்கு மாபோல்,
உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை
உருவினை மறைப்ப(து) ஓரார், 370
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன
அழகினுக்(கு) அழகு செய்தார் :
இமிழ்திரைப் பரவை ஞாலம்
ஏழைமை உடைத்து மாதோ !

[அமிழ் - தாழ்கின்ற. துணை - இரண்டு. உமிழ் சுடர்க் கலன்கள் - ஒளி வீசும் ஆபரணங்கள். ஓரார் - ஆராயாதவராய். இமிழ் - ஒலிக்கிற. திரை - அலை. பரவை - கடல். ஞாலம் — உலகம். ஏழைமை - அறியாமை. உடைத்து - உடையது.]

கண்ணை மூடி அதன் அழகை மறைக்கக் கூடிய இமையைக் கண்ணுக்கு அழகென்று இயற்கை அமைத்திருக்கிறதல்லவா? அப்படியே தோழிகள் ‘அந்த ஆபரணங்கள் எப்படி ஒளி வீசிய போதிலும், சீதையின் மேனியழகை மறைத்து விடுமே!’ என்று நினைத்துப் பார்க்காமலே அவளை அலங்கரிக்கத் தொடங்கி விட்டார்களாம்.

தேவாமிர்தத்திற்கு அதிகச் சுவை கொடுக்க வேண்டுமென்று வெல்லம் முதலியவற்றைச் சேர்ப்பவருண்டோ? அழகுக்கு அழகு செய்வது வீண் முயற்சிதானே? ‘அழகு வேறு, தான் வேறு’ என்று இல்லாமல், அழகே தானகவுள்ள சீதையையும் அழகு செய்வதா? ஆனல்

அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள்? சரி; 'உலகம் அறியாமையில் ஆழ்ந்திருப்பதுதானே!' என்கிறான் கவிஞன்.

இது கம்பன் கவிதையின் சிறப்பியல்புகளை வெளியிடத்தக்க ஓர் அற்புதமான கவிதை. உபமான உபமேயங்கள் எவ்வளவு பொருத்தமாக ஓசையின்பத்துடன் இசைந்து வருகின்றன!

தோழிகள் சீதையைப் பலவிதமாக அலங்கரித்தார்கள். கூந்தலில் மாலை சூட்டிக் காதணிகள் அணிந்ததும், அவை ஊஞ்சல் போல அசைகின்றன. சீதையின் உள்ளமும் அச்சமயம் அப்படியே ஊஞ்சலாடுவது போலிருக்கிறதாம்:



இந்தப் பாட்டின் இரண்டாவது மூன்றாவது அடிகளைப் பாடிப் பாடிப் பார்க்கவேண்டியதுதான். வியாக்கியானம் இங்கே கவிதையின் அழகைக் கெடுத்து விடும், அதிக அஞ்சனம் கண்ணைக் கெடுப்பது போலே.

*　　　　*　　　　*

அணிகள் அணிந்தும், பூச் சூட்டியும், கண்ணுக்கு மையிட்டும், பெண்களுக் கெல்லாம் திலகம் போன்றவளுக்குத் திலகமிட்டும் அலங்கரித்த பின், தோழியர் அவளைச் சுற்றிச் சுற்றி வந்து பலவேறு கோணங்களி லெல்லாம் நின்று நின்று அந்த அழகைப் பார்த்துப் பார்த்து வெறி கொள்ளுகிறார்களாம்.

கஞ்சத்துக் களிக்கும் இன்தேன்
　　கவர்ந்துணும் வண்டு போல,
அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லாம்
　　அருளினாள் அழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தம்
　　தகைதடு மாறி நின்றார்!
மஞ்சர்க்கும் மாத ரார்க்கும்
　　மனமென்ப தொன்றே யன்றோ?

[கஞ்சம் - தாமரைப் பூ. உணும் - உண்ணும். அஞ்சொற்கள் - அழகிய சொற்கள். கிள்ளை — கிளி. மாந்தி - பருகி. தகை - தகுதி; இயற்கை நிலை. மஞ்சர் - மைந்தர்; ஆடவர்.]

தாமரைப் பூவிலுள்ள மதுவைக் கொள்ளை கொண்டு பருகி மயங்கும் வண்டுகள் போல, அத்தோழிப் பெண்கள் சீதையின் அழகைப் பருகி ஆனந்த வெறி கொள்ளுகிறார்கள். அந்த வெறியிலே ஒருவருக்கொருவர் பேசும்போதும், சீதையுடன் பேசும்போதும், பேச்சும் இயற்கையாக வராமல் குழறிப் போகிறது. ஏன்? இயற்கைக் குணமே மாறுபட்டுத் தடுமாறி நிற்கிறார்கள். என்ன அதிசயம், என்ன விபரீதம்! பெண்களாக இருந்த போதிலும் சீதையின் சௌந்தர்யத்தைக் கண்டு காதல் கொள்ளுகிறார்கள்!

இப்பாட்டின் கருத்தைக் கவர்ந்து பிற்காலப் புலவரொருவர் தம் பிரபந்தத்தில் பின் வருமாறு அமைத்துக் கொண்டிருக்கிறார்;

பூட்டினார் பொன்னுக்குப்
　　பொன்னிடுவார் போல்பணிகள்;
சூட்டினார் பூமாலை;
　　சுற்றிநின்றார் தோழியர்கள்.
கண்ணுக்குள் கண்மணிபோல்,
　　கண்மணிக்குள் பாவையைப்போல்
பெண்ணுக்குப் பெண்ணாசை
　　கொள்ளவந்த பெண்ணரசு!

இந்த ஆசை - நிலையில் அதிசயமுமில்லை, விபரீதமுமில்லை, என்கிறான் கம்பன். ஆண்மன மென்றும், பெண்மன மென்றும் மனங்களில் பேதமுண்டோ?

மஞ்சர்க்கும் மாத ரார்க்கும்
　　மனமென்ப தொன்றே யன்றோ?

என்பது கவிஞன் சமாதானம்.

'வெள்ளத்தின் சடிலத் தான்தன்
வெஞ்சிலை இறுத்த வீரன்,
தள்ளத்தன் ஆவி சோரத்
தனிப்பெரும் பெண்மை தன்னை
373 அள்ளிக்கொண்(டு) அகன்ற காளை
அல்லன்கொல்? ஆங்கொல்?' என்பாள்
உள்ளத்தின் ஊச லாடும்
குழைநிழல் உமிழ விட்டார்.

[வெள்ளம் - கங்கை வெள்ளம். சடிலத்தான் - சடையணிந்த சிவ பெருமான். வெஞ்சிலை - பயங்கரமான வில். இறுத்த - முறித்த. தள்ள - தடுமாற. சோர - தளர. காளை - கட்டிளமைப் பருவம் வாய்ந்தவன். அல்லன்கொல் - அல்லனோ. ஆங்கொல் - (அவன்) தானோ? உள்ளத்தின் - உள்ளம் போல. குழை - காதணி. நிழல் - ஒளி. உமிழ இட்டார் - உமிழும்படி அணிவித்தார்.]

'பயங்கரமான சிவ தனுசை ஒடித்த அந்த வீரன் தானா, அன்று நான் கன்னிமாடத்திலிருந்து கண்டு காதலித்த இளைஞன்?' என்ற சந்தேகம் இன்னும் கூடக் கொஞ்சம் ஏற்படுகிறதாம் சீதையின் உள்ளத்திலே. நீலமாலை என்ற தோழி ராமன் வில்முறித்த செய்தியைச் சொன்னதும்,

சொல்லிய குறியின்அத்
தோன்ற லே; அவன்
அல்லனேல் இறப்பன்என்(று)
அகத்துள் உன்னினாள்.

என்று ஏற்கெனவே ஸங்கல்பம் செய்து கொண்டிருந்தாள் சீதை. அந்தச் சந்தேகம், நிச்சய தாம்பூலத்திற்காக அலங்கரிக்கும்போதும் இவள் உள்ளத்தை நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையே ஊஞ்சலாடும் படிச் செய்து விடுகிறதாம். இக் குறிப்புக்கள். வால்மீகத்தினின்று கம்பன் மாறுபட்டுச் சித்திரிக்கும் காதல் மணத்திற்கு நம் கவனத்தை இழுக்கின்றன.

* * *

கூந்தலில் மாலை சூட்டிக் கழுத்திலே ஆரம் அணிந்து, கையில் கடகமும் இடையில் மேகலையும் பாதங்களில் சிலம்பும் அணிந்தார்கள் தோழியர். பிறகு கண்ணுக்கு மையிடுகிறார்கள். அந்த மைதீட்டிய கண்களைப் படம் பிடிக்கும் கவி இது:

நஞ்சினோ(டு) அமிழ்தம் கூட்டி
நாட்டங்க ளான என்னச்,
செஞ்செவே நீண்டு மீண்டு
374 சேயரி சிதறித், தீய
வஞ்சமும் களவு மின்றி
மழையென மதர்த்த கண்கள்
அஞ்சன நிறமோ? அண்ணல்
வண்ணமோ? அறிதல் தேற்றாம்.

[நாட்டங்கள் - கண்கள். செஞ்செவே-நேராக. சேயரி - சிவந்த ரேகைகள். மதர்த்த - ஆவல் மிகுதியைக் காட்டும். அறிதல் தேற்றாம் - தெளிவாக அறிகின்றோமில்லை.]



பி. ஸ்ரீ.

99. பஞ்ச ரத்தினங்கள்

'சீதையை அழகு செய்த தோழிகளே அவள் அழகைப் பருகி வெறி கொண்டார்கள், அவளைக் காதலித்தார்கள்!' என்றெல்லாம் துணிந்து கூறுவதற்கு,

மஞ்சர்க்கும் மாத ரார்க்கும்
  மனமென்ப(து) ஒன்றே யன்றோ?

என்ற சமாதானம் மட்டும் போதும் என்று கவிஞன் கருதவில்லை. "ஒவ்வொரு பெண்ணிடத்திலும் ஒவ்வொரு வித அழகு சிறப்பாக விரும்பத் தக்கதாயிருக்க, அழகுகளை யெல்லாம் ஒருங்கே கண்டால் யாரால் பொறுக்க முடியும், யாவரே தாங்க வல்லார்?" என்னும் ஒரு சமாதானம் சொல்லுகிறான் கவிஞன் :

உழைகுலாம் நயனத் தார்மாட்(டு)
  ஒன்றொன்றே விரும்பற்(கு) ஒத்த(து)
அழகெலாம் ஒருங்கே கண்டால்
  யாவரே ஆற்ற வல்லார்?

[உழை - மான். குலாம் - குலாவும், விளங்கும். நயனத்தார் மாட்டு - கண்கள் உடையவரிடத்தெல்லாம். ஆற்ற - பொறுக்க, தாங்க.]

'கம்பனது காவிய அழகுகளை அனுபவித்து மயங்கும் ரஸிகர் படும் பாடும் இது!' என்று பேரறிஞர் வ. வெ. சு. ஐயர் கூறுவதுண்டு. ஒவ்வொரு உலக இதிகாஸத்திலும், ஒவ்வோர் அழகு விசேஷமாய் விரும்பத் தக்கதாக இருத்தல் கூடும். 'ஆனால் அந்த அழகுகள் எல்லாவற்றையும் ஒருசேரக் கம்பனிடம் பார்க்கிறோம்' என்பது வ. வெ. சு. ஐயர் கருத்து. கம்பன் கவிதையிலே தமக்குள்ள ஆனந்த வெறியை அப்பெரியார்,

அழகெலாம் ஒருங்கே கண்டால்
  யாவரே ஆற்ற வல்லார்?

என்ற கம்பன் - பாஷையிலேயே வெளியிடுவதுண்டு.



தோழிகள், ஒருவர் முன் ஒருவராய் நெருங்கி வந்து ஆனந்த வெறியுடன் சூழ்ந்து கொள்ள, சீதையும் இளஞ் சந்திரன் (இந்துவின் கொழுந்து) நக்ஷத்திர இனத்தோடு வருவது போலச் சபா மண்டபத்தை நோக்கி நடந்தாள். அந்த அழகையும், மணி மண்டபத்தை அவள் அடைந்த அழகையும் வர்ணிக்கும் ஐந்து கவிகளைப் 'பஞ்ச ரத்தினங்கள்' என்று சொல்லலாம்.

முதலாவது கவியில், சீதை நடக்கத் தொடங்கிய அழகுடன், தோழியர் அவளுக்கு அணிந்த ஆபரணங்களின் பல நிற மணிகளும் அவள் நடக்கும் பாதையிலே பலநிற ஒளிகள் வீசுகிற அழகும் வர்ணிக்கப் படுகிறது :

வல்லியை
உயிர்த்தநில
மங்கை,' இவள்
பாதம்
மெல்லிய,
உறைக்கும்' என
அஞ்சி, வெளி
யெங்கும்
பல்லவ
மலர்த்தொகை -
பரப்பினள்
எனத்தன்
நல்லணி
மணிச்சுடர்
தவழ்ந்திட
நடந்தாள்.

[வல்லி-பூங்கொடி, (இங்கே) சீதை.

உயிர்த்த – பெற்ற. மெல்லிய - மென்மையான. உறைக்கும் – உறுத்தும். பல்லவம் – தளிர்கள். தொகை – தொகுதி. மணிச்சுடர் – இரத்தின காந்தி.]

'இவள் பாதங்கள் மிகவும் மென்மையானவை; தரை உறுத்துமே' என்று, சீதை என்ற பூங்கொடியைப் பெற்ற பூமிதேவி அஞ்சினளாம். அஞ்சி, இவள் நடந்து செல்லும் வழியெங்கும் பல நிறமுள்ள தளிர்களையும் மலர்களையும் பரப்பி வைத்தாள் என்று சொல்லும்படி, சீதை அணிந்திருந்த நகைகளிலிருந்து பற்பல நிறங் கொண்ட இரத்தின காந்திகளின் ஒளிரேகைகளும் இவள் நடக்கும் பாதையில் விழுந்து பாவிச் செல்லுகின்றனவாம்.

அடுத்த கவியில், தோழியர் பக்கங்களில் வெண் சாமரம் வீச, இவள் தோகை மயில்போலச் செல்லும் அழகு வர்ணிக்கப்படுகிறது:

கொழுந்துடைய சாமரை
குலாவ,ஓர் கலாவம்
வழங்குநிழல் மின்னவரும்
மஞ்ஞையென வந்தாள்.

78
377
236

[கலாவம் - கலாபம், (1) மாதர் அரையில் அணியும் பதினாறு மணிக் கோவை. (2) மயில் - தோகை. நிழல் - (இங்கே) ஒளி. மஞ்ஞை - மயில்.]

கலாப மயில் போல வருகிறாளாம், சூரியப் பிரகாசமாகவே ஜொலித்த ஒரு விதானத்தின் கீழே. அந்த ரத்தின கசிதமான விதானத்தை மேலே பிடித்து வந்தார்கள் சீதை நடந்துவரும்போது. ராமனது குல முதல்வனான சூரியனே, பெண்மணிகளுக் கெல்லாம் கண்மணியும் ராமனுக்கு வாய்த்த கட்டழகியுமான அவளைச் சமீபத்தில் வந்து பார்க்க அப்படி இறங்கி வந்தது போலிருக்கிறதாம் அந்த விதானம். இது மூன்றாவது கவியில் விதான வர்ணனை.

நாலாவது கவியில், கலாபம் என்ற அந்த மேகலாபரணந்தான் எப்படியெல்லாம் பொற்சுடர் வீசுகிறது! மற்றுமுள்ள இரத்தின ஆபரணங்களும் 'வான வில்' வீசுகின்றன. 'மின்னல்கள்' மின்னுகின்றன. இந்த ஆபரண சோபைகளுக்கும் மேலாக ஜொலிக்கும் தேக காந்தியுடன் சீதை சிற்றிடை துவள அடி பெயர்த்து வருவதை,

வில்தவழ வாள்நிமிர
மெய்யணிகள் மின்ன,
சிற்றிடை நுடங்கஒளிர்,
சீறடி பெயர்த்தாள்.

378

[வில், வாள் – ஒளி விசேஷங்கள். மெய்யணிகள் – உடம்பில் அணிந்த ஆபரணங்கள். சிற்றிடை - சிறு இடை. நுடங்க – துவள. சீறடி – சிறு அடி. பெயர்த்தாள் – எடுத்து வைத்தாள்.]

என்ற அடிகள் எவ்வளவு தத்ரூபமாய்ப் படம் பிடிக்கின்றன!

ஐந்தாவது கவியில், சீதை சபா மண்டபத்தை அடையும் காட்சி. மண்டபமெல்லாம் ஒரு புதிய ஒளி பெற்றது போல் சோபிக்கிறது. அந்தத் தேக காந்திதான் எப்படியெல்லாம் புலனுகிறது, பாருங்கள்:

பொன்னின்ஒளி பூவின்வெறி
சாந்துபொதி சீதம்
மின்னின்நிழல் அன்னவள்தன்
மேனியொளி மான
அன்னமும் அரம்பையரும்
ஆரமிர்தும் நாண
மன்னவை இருந்தமணி
மண்டபம் அடைந்தாள்.

[வெறி - பரிமளம். சாந்து - சந்தனம். பொதி சீதம் - பொதிந்துள்ள குளிர்ச்சி. மின்னின்ஒளி - மின்னலின் பிரகாசம். மான - ஒத்து விளங்க. அரம்பையர் - தெய்வப்பெண்கள். மன்னவை - ராஜ சபை.]

ஒரு கணம் சீதையின் காந்தி பொன்னெளி போலப் பிரகாசிக்கிறது. ஒரு கணம் பூவின் பரிமளமோ என்று பிரமிக்கும்படி அதி சூக்ஷ்மமாய்ப் புலனுகிறதாம். ஒரு கணம் அந்தத் தோற்றம் சந்தனத்தின் குளிர்ச்சியை நினைப்பூட்டுகிறதாம்; மறு கணமே மின் வெட்டுவது போல் அழகு கண்ணைப் பறிக்கிறது.

'என்ன நடை! என்ன அழகு! என்ன இனிமை!' என்று தேவ ரம்பைகளும் தேவாமிர்தமுங்கூட நாணும்படி வந்து சேருகிருள் சீதை சபா மண்டபத்திலே.

பிறகு என்ன நடக்கிறது? அடுத்த வாரம் பார்க்கலாம்.

பி. ஸ்ரீ.

100. மலையும் முறிந்து போகாதா?

மண்டபத்திலே சீதை வந்து சேர்ந்ததும், அந்த ஸௌந்தரியத்தைக் கண்ட ஆடவர் பெண்டிர் அனைவரும் சித்திரப் பாவைகள் போல, — ஆம், அம் மண்டபத்திலே எழுதி வைத்த சித்திரப் பிரதிமைகள் தானோ என்று எண்ணும்படி, — அப்படியே இருந்து விட்டார்களாம் :

இமைத்திலர், உயிர்த்திலர்கள்,
சித்திரம் எனத்தாம் !

[உயிர்த்திலர் – மூச்சும் விடாதவர்களாய்.]

அதே சமயம், ராமனும் சீதையைப் பார்க்கிறான். 'முன்னமே அக் கன்னி மாடத்திலே கண்டோமே, அவளா, — அல்லவா — இந்த ஜனக ராஜகுமாரி?' என்று சந்தேகித்துக் கொண்டிருந்த ராமன் இவளை இப்போது மண்டபத்திலே கண்டதும், இடையிடையே தனக்குத் தோன்றிய சந்தேகம் தீர்ந்து களிப்படைகிறான்.

அன்னவளை அல்லளென,
ஆமென, அயிர்ப்பான்,
கன்னிஅமிர் தத்தைஎதிர்
கண்டகடல் வண்ணன்,
உன்னுயிர் நிலைப்பதோர்
அருத்தியொ(டு) உழைத்(து)ஆண்(டு)
இன்னமிர்(து) எழக்களிகொள்
இந்திரனை ஒத்தான்.

[அன்னவளை – அப்படிப்பட்ட பெண்ணை. அயிர்ப்பான் – சந்தேகிப்பவனாய். கடல் வண்ணன் – கடல் போன்ற நிறமுடைய ராமன். உன் உயிர் – (கவலையோடு) நினைத்துக் கொண்டிருந்த. அருத்தி – விருப்பம். உழைத்து – (இங்கே) வருந்தி. ஆண்டு – அங்கு. இன்னமிர்து – இனிமையான அமிர்தம்.]

தேவேந்திரன் தேவாமிர்தம் பெற்றுத் தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டான். அமிர்தம் பாற்கடலில் எழாமல் போனால் இந்திரனுக்கு உயிர் நிலைத்திருக்க முடியுமா? அப்படியே ராமன், சீதை யென்ற கன்னி யமிர்தத்தை — அதாவது 'கன்னியர் சமூகம்' என்ற பாற்கடலிலே

தோன்றிய சீதை என்ற அமிர்தத்தை—க் காணப் பெற்றுத்தான் உயிர் நிலைக்கப் பெறுகிறானும்.

அவ்வளவு களிப்புடன் ராமன் எதிரே வந்த சீதையைக் கண்டு, "கன்னிமாடத்தை விட்டு என் நினைப்பிடையே குடிபுகுந்தவள் என் உள்ளத்தையே அன்றி இப்படி வெளியிலும் இருக்கிறாளோ ?" என்று தன்னைத் தானே அதிசயமாய்க் கேட்டுக் கொள்கிறான் :

'நிறத்துவர் இதழ்க்குயில்
நினைப்பினிடை அல்லால்,
புறத்துமுள தோ ?' என
மனத்தோடு புகன்றான்.

[துவர் - சிவப்பு. குயில் - (இங்கே) குயில் போன்ற இனிய குரலையுடைய சீதை.]

அப்போது தசரதன் முதலானவர்களும் சீதையின் அழகைக் கண்டு, ஆச்சரியத்தில் மூழ்கிப் போனார்கள். தசரதன் எண்ணினான் : "நான் அரசாளும் செல்வத்தை அடைந்திருக்கிறேன் எவ்வளவோ காலமாக. எனினும் அதெல்லாம் ஒரு செல்வமாகத் தோன்றவில்லையே இப்போது !



இவளை என் மருமகளாகப் பெற்ற இன்றுதான் செல்வத்தை உண்மையாகப் பெறுகிறேன்!"

'என்றும்உல கேழும்அர
செய்தியுள னேனும்,
இன்றுதிரு எய்தியது
என்வயம' தென்றான். 383

[திரு - செல்வம். வயம் - வசம்.]

சீதை சமீபமாக வந்த மாத்திரத்திலே, சில கைகள் தவிர ஏனையோர் கைகளெல்லாம் தங்களை அறியாமலே தலைமீது சேர்ந்தனவாம் பக்தியோடு. சீதாலக்ஷ்மி யல்லவா? அந்தத் தெய்வ ஸௌந்தரியத்தைக் கண்டதும், தெய்வமென்றே கருதி விட்டனவாம மனமும் புத்தி முதலிய அந்தக்கரணங்களும். குருமார்களான ரிஷிகள், தசரதன், ஜனகன், ராமன் முதலிய சிலரே இவளைக் கை கூப்பித் தொழவில்லை.

சீதை மகரிஷிகளை நமஸ்கரித்து மாமனாரின் பாதமலரையும் தொழுது, தந்தைக்கு அருகே இட்டிருந்த ஓராசனத்தில் அமர்ந்தாள். அப்போது, ஜனகன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் கசிந்தது; குளிர்ந்த இனிமையான பனி சூழ்ந்தது போன்ற ஒரு தோற்றம் ஏற்பட்டதாம்.

அச் சமயம், சீதையைக் கண்டு வியந்து கொண்டிருந்த விச்வாமித்திர முனிவர், "சரி, சரி; இப்போது விளங்கி விட்டது" என்று எண்ணுகிறாராம். அது என்ன, அந்த விளக்கம்? "ராமன் அந்த வில்லை முறித்தானே, அந்த ரகஸ்யம் இப்போது விளங்கி விட்டது!" என்றுதான் எண்ணுகிறார் முனிவர்:

நச்சுடை வடிக்கண்மலர்
நங்கைஇவள் என்றால், 384
இச்சிலை கிடக்க,மலை
ஏழையும் இறாரோ?

[நச்சுடை—நஞ்சு உடைய. வடி—கூர்மை. சிலை—வில்.]

ராமனுடைய வலிமையைத் தாடகை வதம் முதலான செயற்கருஞ் செயல்களால் தெளிவாகக் கண்டு கொண்டவர்தான். எனினும் சிவதனுசை அவ்வளவு அநாயாசமாக முறித்தது இந்த முனிவருக்கும் ஒருவாறு ஆச்சரியமாகத் தான் இருந்தது. சீதையைக் கண்ட பின்போ, 'இந்த நங்கை இந்தக் கண்ணால் பணித்த பணி என்றால் இந்த வில் கிடக்கட்டும்; ஏழு மலையையே வேண்டுமென்றால் முறித்துவிட மாட்டானா?' என்று நினைக்கிறார்.

காற்றில் ஏறிஅவ்
விண்ணையும் சாடுவோம்,
காதற் பெண்கள்
கடைக்கண் பணியிலே!

என்ற புதுமைக் கவிஞரின் வாக்கு நினைவிற்கு வருகிறதல்லவா?

லௌகிக விஷயங்களிலும் மேதாவியானவர் விச்வாமித்திரர். இத்தகைய முனிவர் ராமனுடைய காதலையும் ஒருவாறு ஊகித்து அறிந்திருக்கலாம். இப்போது சீதையைக் கண்டதும் அந்த ஊகம் உறுதிப்படுகிறது. ராமன் வில்முறித்த வெற்றி காதலின் கன்னி வெற்றி என்பது விச்வாமித்திர சாட்சியாலும் ருசுவாகி விட்டது.

பி. ஸ்ரீ.

101. 'திருமணம் நாளைக்கு'

கண்களின் காதல்-பேச்சு

தான் கண்டு காதலித்த அழகன்தான் வில்லை முறித்திருக்க வேண்டும் என்று, நீலமாலை வந்து சொன்னதிலிருந்தே, தெரிந்து கொண்ட சீதைக்குக் கொஞ்சம் சந்தேகமும் இடையிடையே தோன்றாமல் இல்லை. கடைசியாக, இப்போது அந்தச் சந்தேகத்தை எப்படித் தெளிந்து கொள்கிறாள்?

அச்சபையில் ராமனை நிமிர்ந்து நேராகப் பார்ப்பதற்கோ நாணம். ஆகவே, இந்தத் தந்திரம்:

கைவளை திருத்துபு
கடைக்கணின் உணர்ந்தாள்!

[திருத்துபு — திருத்தத் தொடங்கி; ஒழுங்குபடுத்தத் தொடங்கி.]

கை வளையல்களை ஒழுங்கு படுத்துகிறது என்ற வியாஜத்தால் ராமனைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொள்கிறாள். ஆம், அந்தக் கண்கள் மறுபடியும் சந்திக்கின்றன. அந்தக் காதல்—பேச்சையும், அதனால் சீதை அடைந்த நிலையையும் வர்ணிக்கும் கவி:

கருங்கடை நெடுங்கண் ஒளி—
ஆறு, நிறை கண்ணைப்
பெருங்கடலில் மண்ட, உயிர்
பெற்(று) இனி(து) உயிர்க்கும்
அருங்கலன் அணங்கரசி,
ஆரமிழ்(து) அனைத்தும்
ஒருங்குடன் அருந்தினரை
ஒத்(து) உடல் தடித்தாள்.

[கண்ணைப் பெருங் கடல் - கண்ணாகிய அழகுப் பெருங் கடல். மண்ட - நெருங்கிப் பாய. உயிர்க்கும் - மூச்சு விடுகிற. அருங்கலன் - அருமையான ஆபரணங்கள். அணங்கரசி - பெண்ணரசி. ஆரமிழ்து - அருமையான அமிர்தம். அருந்தினரை - உண்டவர்களை.]


சீதையின் கடைக் கண்ணிலிருந்து பெருகிய ஒளியாறு ராமனது கண்ணாகிய அழகுப் பெருங் கடலில் மண்டிப் பாய்கிறதாம். அதனால் சீதை உய்ந்துயிர் பெறுகிறாள்.

எவ்வளவு ஆத்திரத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டே பார்த்தான்! இப்போது 'அதே காதலன் தான்' என்று கண்டதும், மூச்சும் சோர்ந்து விட்டது. உடம்பும் சோர்ந்து விட்டது — என்றால் போதுமா? பல கோடி தேவர்கள் பக்கிட்டு உண்ட அமிர்தத்தை யெல்லாம் வேறு எவரோடும் பகிர்ந்து கொள்ளாமல் தானே உண்டாற் போல உடம்பு பூரிக்கப் பெறுகிறாளாம். 'உடல் தடித்தாள்!' என்று கவிஞன் துணிந்து காட்டுவதைப் பாருங்கள்.

காரியப் பேச்சு

காதலர்களுக்கிடையே நிகழும் இவ்வளவு ரஸமான நிகழ்ச்சியைக் கவிஞன் இப்படி யெல்லாம் வர்ணித்துக் கொண்டு வருகிறான், நிச்சய தாம்பூலம் என்ற அந்தச் சடங்கையே மறந்து விட்டது போல. ஆனால், இந்தக் கண்கள் வழங்கிக் கொண்ட நிச்சய தாம்பூலத்திற்கும் மேலான ஒரு சடங்கும் இருக்க முடியுமா? இனிக் காரியப் பேச்சுடன் இந்தக் கட்டத்தையே முடித்து விடுகிறான் கவிஞன்.

தசரத சக்ரவர்த்தி விச்வாமித்திரரைப் பார்த்து, "விவாகம் எப்போது நடைபெற வேண்டும்?" என்று வினவுகிறான். ராமனுடைய மணம் என்று சொல்லவில்லை, சீதாராமர் மணம் என்று கூடச் சொல்லவில்லை, ஸீதா கல்யாணம் என்றே குறிப்பிடுகிறான். வில் முறித்து நடைபெறும் இத்திருமணம் முன்பு 'மகன் வெற்றி'யாகத் தோன்றியது; இப்போதோ 'எல்லாம் மருமகளின் வெற்றி'யாகவே காண்கிறது!



'வல்லிபொரு சிற்றிடை
மடந்தைமண நாளாம்
எல்லையில் நலத்தபகல்
என்(று)உரைசெய்'
கென்றான்.

[வல்லி - பூங்கொடி. பொரு- ஒத்த. சிற்றிடை - மெல்லிய இடை. மடந்தை - (இங்கே) சீதை. எல்லையில் நலத்த பகல்-எல்லையில்லாத நலங்களோடு கூடிய முகூர்த்த தினம். என்று-எந்தத்தினம். உரை செய்க - சொல்லி அருளுக.]


'திருமணம் நாளைக்கே தான்!' என்று மறுமொழி சொல்லுகிறான் முனிவன். அந்த மறுமொழி

யத்தான் எவ்வளவு சவுக்க
ாக, தமாஷாகச் சொல்
றான்?

வாளை உகளக், கயல்கள்
வாவும் அதின், மேதி
ளைமுது கைக்கிழிய,
ஊரியவ ரால்மீன்
பாளைவிரி யக்குதிகொள்
பண்ணைவள நாடா!
நாளையென உற்றபகல்”
நற்றவன் உரைத்தான்.

[வாளை - வாளை மீன். உகள- துள்ளிக் குதிக்க. கயல் - கயல் மீன். வாவும் - தாவும். அதின் - அதனாலும். மேதி - எருமை. ஊரிய-வலி பொருந்திய. பாளை - கமுகு, தெங்கு முதலியவற்றின் பாளைகள். பண்ணை - கழனிகள். உற்ற-பொருந்திய. நற்றவன்-நல்ல தவம் செய்த முனிவன்.]

வாளை என்ற பெரிய மீன்களும் சிறிய கயல் மீன்களும், தண்ணீரில் கிடக்கும் எருமைகளின் தலையிலும் முதுகிலும் துள்ளிக் குதிக்கின்றனவாம், தாவிப் பாய்கின்றனவாம். ‘எருமையின் மூளையும் முதுகும் கிழிந்து போகுமோ?’ என்று சொல்லும்படி அந்த மீன்கள் அவ்வளவு தடபுடலாகக் குதித்துப் பாய்ந்த போதிலும், எருமை மாடு அசைந்து கொடுப்பதாகவே தெரியவில்லை! அதே சமயம் வலிமையுள்ள வரால் மீன்கள் வெள்ளத்திலிருந்து அருகேயுள்ள கமுகு, தெங்கு முதலிய மரங்களின் பாளைகளைத் தாக்கிக் குதிக்கின்றனவாம். அந்த மோதுதலினால், பாளைகள் விரிகின்றனவாம். இவ்வளவு கதையையும் என் சொல்கிறான் விச்வாமித்திரன்?



"இவ்வளவு மிகுந்த நீர்வள நிலவளங்களையுடைய அரசனே!" என்று தசரதனை அழைத்து, "நாளைக்கே தான் கல்யாணம்!" என்று மிகவும் சுருக்கச் சொல்லி விடுகிறான்.

பிரிகிறார், மறைகிறார்

இந்த உத்ஸாகப் பேச்சுக்குப் பின், தசரதன் 'சரி' யென்று தன் விடுதிக்குப் புறப்படுகிறான். ஜயசங்கம் முழங்குகிறது. சிற்றரசர்கள் எல்லோரும் எழுந்து நின்று கைகூப்பி வழிபட்டு வழிவிடுகிறார்கள்.

சீதை ராமனை விட்டுப் பிரிய மனமில்லாமல், நின்று நின்று தயங்கிச் செல்கிறாள். அப்படியேதான் ராமனும் அம் மண்டபத்தை விட்டு நீங்கித் தன் இருப்பிடத்துக்குப் போகிறான். அரசர்கள், முனிவர்கள் எல்லோரும் தனித் தனி பிரிந்து அவரவர் இருப்பிடம் போகிறார்கள்.

அப்போது சூரியாஸ்தமன சமயம்:

அன்னம்அரி திற்பிரிய,
அண்ணலும் அகன்(று)அப்
பொன்னின்நெடு மாடவரை
புக்கனன், மணிப்பூண்
மன்னவர் பிரிந்தனர்கள்,
மாதவர்கள் போனார்,
மின்னுசுடர் ஆதவனும்
மேருவில் மறைந்தான்.

[அன்னம் - சீதை. அரிதிற் பிரிய - அருமையாகப் பிரிய. மாடவரை - மாளிகையாகிற மலை. மணிப்பூண் - ரத்தினாபரணம். மாதவர் - முனிவர். ஆதவன் - சூரியன். மேரு - பொன்மயமான மலை.]

தசரதன், ராமன் முதலியோர் தம் தமக்கு உரிய இடத்தில் மறைந்து சென்றது போல், சூரியனும் தனக்கு உரியதொரு பொன்மயமான இடத்தில் மறைந்தான் என்று கவிஞனும் நம்மிடம் உத்ஸாகமாக உரையாட விரும்புவது போல், சூரியாஸ்தமனத்தையும் தமாஷாக வர்ணித்து முடிக்கிறான்.

கம்ப நாடக மேடையில் பொன் மயமான திரை விழுகிறது.

திரை விலகியதும், என்ன பார்க்கப் போகிறோம்? கல்யாண தடபுடல் தானே? அவ்வளவு ஆத்திரம் வேண்டாம்; பொறுத்துப் பாருங்கள்.

பி. ஸ்ரீ.

102. பொழுதும் விடிந்தது

காட்டு வழியிலே போய்க்கொண்டிருக்கிறவர்கள் தாகத்தால் வருந்துகிறார்கள். 'எங்கேயாவது கொஞ்சம் தண்ணீர் கிடைக்காதா?' என்ற ஆசையால் அலைந்து அவஸ்தைப்படுகையில் பக்கத்திலேயே ஒரு குளத்தைக் காண்கிறார்கள். என்ன அதிர்ஷ்டம்! ஆனால் — என்ன துரதிர்ஷ்டம்! — இறங்குவதற்குத்தான் வழி யில்லை. தண்ணீரைப் பார்த்தும் தாகசாந்தி கிடைக்க வில்லை. தளர்ச்சியும் கலக்கமும்தான் அதிகரிக்கின்றன.

சீதை தவிப்பு

இத்தகைய யாத்திரிகரின் நிலையை அடைகிறாளாம் சீதை அன்றிரவு. பொழுது விடிந்தால் கல்யாணம்; ஆனால் அந்தப் பொழுது எப்பொழுது விடியுமோ?

ஜனகன் செய்த உபசாரங்களால் விருந்தாளிகளெல்லாம் தேவபோகங்களை நுகர்ந்தவர்களைப் போலவும், உடம்போடு தேவலோகத்தை அடைந்தவர்களைப் போலவும் இருக்க, சீதையோ இப்படித் தன் காதல்-தாகத்தால் தவித்துக் கொண்டிருக்கிறாள். காதலனை மறுபடியும் காணப் பெற்றும் அவனை அப்போதே அடையப் பெறவில்லையே என்று தளர்ந்து கலங்குகிறாள், மயங்குகிறாள்.

"சூரியன் வரவே என்னை ஆட்கொள்ளும் தலைவனும் வருவான், என்னருகில் வருவான்" என்றுதான் தெரியுமே. ஆகவே,

'இரவே கொடியாய்!
விடியாய்' எனுமால்

[எனும் - என்று சொல்வாள்.]

ஜில்லென்று தென்றல் வீசுகிறது. சீதையோ நடுங்கி, (குளிரால் அல்ல என்பதுதான் நமக்குத் தெரியுமே!)

தென்றல் --புலியே!
இரைதேடுதியோ?

என்று அலறுகிறாள்.

ராமன் தவிப்பு

ராமனுக்கும் அந்த இரவு ஏறக் குறைய இப்படித்தான் கழிந்தது.

ம்னனே! எனை நீ
யும், மறந் தனையோ?

என்று பிரலாபிக்கிறான்.

ராமன் மனம் சீதையைத் தொடர்ந்து போய் விட்டதாம். 'நீ யார்? என் வந்தாய்?' என்று கூடச் சீதை அந்த மனத்தைப் பார்த்து யோக க்ஷேமம் விசாரிக்க வில்லையாம்.

வினவா தவர்பால்
விடைகொண் டிலையோ?

என்று மனத்தை நோக்கிக் கேட்கிறான் ராமன்.


'உன்னை வினவாத அவளிடம் நீயும் விடைபெற்றுக் கொள்ளாமலே திரும்பி விடுவது நியாயமாக இருக்க, விடைபெற்றுக் கொண்டும் வரவில்லையே! அங்கேயே தங்கி விட்டாயே—அந்த மதியாதார் முற்றத்திலே!' என்று தவிக்கிறான். 'அவளோடு சென்ற நீயும் அவளிடமே அந்தக் கொடுமையையும் கற்றுக் கொண்டு என்னை மறந்தாயோ?' என்கிறான்.

மற்றவர்களும் உறங்கவில்லை

இப்படி, விடியாத இரவும் விடிந்தது. ஜனகனுக்கும் உறக்கமில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நாளைத் திருமணம் என்று யானைமேல் முரசு அடிக்க வேண்டுமென்று கட்டளை யிடுகிறான். கல்யாண விஷயமாக வேறு காரியங்களிலும் ஈடுபட்டிருக்கிறான். நகரமாந்தரும் — ஆண்களும் பெண்களும், இளையரும் முதியரும்—கண்ணுறங்கவில்லை. அவ்வளவு



ஆத்திரம், ஏலாகம். நக ஏர் அலங்கரிப்பதையே பொழுது போக்காகக் கொண்டு பொழுதைக் கழித்தார்கள்.



சூரியனுக்கும் ஆத்திரம்தான்!

சீதா ராமர்களும் பிறரும், கரையில்லாத கருங்கடல் போலிருந்த அந்த இரவிற்கும் ஒரு கரை கண்டார்கள்! சூரியோதயம் ஆகிறது.

அஞ்சன ஒளியானும்
அலர்மிசை உறைவாளும்
எஞ்சலில் மணம்நாளைப்
புரிகுவர் எனலோடும்,
செஞ்சுடர் இருள்கீறித்
தினகரன் ஒருதேர்மேல்,
மஞ்சனை அணிகோலம்
காணிய எனவந்தான்.

[அஞ்சன ஒளியான் — அஞ்சன ஜோதி என்று சொல்லும்படி தோற்றமளித்த ராமன். அலர்மிசை உறைவாள் — தாமரைப் பூவில் வாழும் லக்ஷ்மியின் அம்சயான சீதாலக்ஷ்மி. எஞ்சலில் — குறைவில்லாத. தினகரன் - சூரியன். மஞ்சன் — மைந்தன், (இங்கே ராமன்). காணிய- பார்ப்பதற்கு.]

இரவு விடியச் சூரியன் உதயமாகும் இயற்கைத் தோற்றத்தை வர்ணிக்கும் இக் கவி, கம்பன் இயற்கையை வருணிக்கும் ஒரு சிறப்பியல்பை வெளியிடுகிறது எனலாம். கல்யாணத்திற்கு வருகிற ஓர் உறவினனாக அறிவிக்கிறான் உதய சூரியனையும் கவிஞன். ராமனுடைய குலமுதல்வனல்லவா? ஒரு தாத்தா தன் பேரப்பிள்ளையின் மாப்பிள்ளைக் கோலத்தைப் பார்க்க ஆசைப்பட்டு வருவது போலச் சூரியன் வருகிறானாம். தன் செஞ்சுடர்க் கரங்களால் இருளாகிய திரையைக் கிழித்துக் கொண்டு — ஆம், அவ்வளவு ஆத்திரம்! ஒரு பொன்மயமான தேரின் மேல் ஜம்மென்று வருகிறானாம்.

ஆத்திரமும் அலங்காரமும்

நகரத்தைத் தொடர்ந்து அலங்கரிக்கிறார்கள் நகர மாந்தர்கள், வீடுகளில் தோரணம் கட்டுகிறார்கள். தூண்களைப் பட்டு - உறைகளால் அலங்கரிக்கிறார்கள். உப்பரிகைகளையும் அலங்கரிக்கிறார்கள். தங்களையும் அலங்கரித்துக் கொள்கிறார்கள். சிலர் சந்தனக் குழம்பையும் பூக்களையும் வீதிகளிலெல்லாம் சிந்திக்கொண்டு திரிகிறார்கள். சிலர் மதில்களின் மேல் கொடிகளைப் பறக்கவிடுகிறார்கள். சிலர் வீடுகளில் பூமாலைகளைத் தொங்க விடுகிறார்கள். பூமாலை புனைந்தும், பரிமள தைல சந்தன லேபங்கள் பூசியும், அணியணிந்தும் அழகிய உடை உடுத்தும் தங்களை

அலங்காரம் செய்து கொள்கிறார்கள். தேர், யானை, குதிரைகளையும் அலங்கரிக்கிறார்கள். சிலர் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். சிலர் கண்ணாடிக்கு முன் நிலைகமிட்டுக் கொண்டு அழகு பார்த்துக் கொள்கிறார்கள். மேலும் மேலும் நெருங்கி வந்த வண்ணமா யிருக்கிறார்கள்..

தேர்மிசை வருவாரும்,
சிவிகையில் வருவாரும்,
ஊர்தியில் வருவாரும்,
ஒளிமணி நிரையோடைக்
கார்மிசை வருவாரும்,
கரிணியில் வருவாரும், 395
பார்மிசை வருவாரும்,
பண்டியில் வருவாரும் —

[சிவிகை - பல்லக்கு. ஊர்தி - வாகனங்கள். மணி - ரத்தினம். நிரை - கூட்டம். ஓடைக் கார் - நெற்றிப் பட்டம் தரித்த மேகம்போன்ற யானை. கரிணி - பெண் யானை. பண்டி - வண்டி.]

— அவசர அவசரமாக வந்து கூடுகிறார்கள்.

அந்தக் கல்யாண நாள் தேவேந்திரன் பட்டாபிஷேக தினம்போ லிருக்கிறதாம். நகரமே இப்படி விளங்கினால், கல்யாண மண்டபத்தின் அலங்கரிப்பைச் சொல்லவா வேண்டும்?

கல்யாண மண்டபம்

சந்திர வட்டக்குடை நிழலில் தசரத சக்ரவர்த்தி, முரசுகளும் சங்குகளும் வேதங்களும் ஒருங்கே முழங்க, பரிவாரங்களுடனும் சிற்றரசர்களுடனும் மண்டபத்தை யடைந்து,

புனைமணி ஆசனம்
பொலியத் தோன்றினான். 396

ராமன் மணக்கோலம் பூண்டு அங்கே வருகிறான். அவன் வரும் கோலத்தைக் கண்ட பெண்மணிகளின் மகிழ்ச்சியை என்னென்பது?

சொரிந்தனர் மலர்மழை,
சுண்ணம் தூவினர்,
விரிந்தொளிர் காசுபொன்
தூசு வீசினர். 397
பரிந்தனர், அழகினைப்
பருகி னார்கொலாம்:
தெரிந்திலம் திருநகர்
மகளிர் செய்கையே!

[சுண்ணம் — வாசனைப் பொடி. காசு — ரத்தினம். தூசு — ஆடை. பரிந்தனர் — விரும்பினவர்களாகி. பருகினார் கொலாம் — பருகினார்கள் போலும். தெரிந்திலம் - தெரிந்தோமில்லை.]

பரதன் தேர் செலுத்த, லக்ஷ்மணனும் சத்ருக்னனும் சாமரை வீசிட ராமன் வரும்போது, பெண்கள் எல்லாம் பூமழை பொழிந்தும், வாசனைப் பொடிகளைத் தூவியும், துணிமணிகளை வீசி எறிந்தும், தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். ஏன் இந்த வெறி? 'அந்த அழகைப் பருகி வெறிகொண்டார்கள் போலும்!' இதையன்றி வேறு காரணத்தை அறிந்தோமில்லை என்று திகைக்கிறான் கவிஞனும். இவனும் அந்த அழகைப் பருகி வெறி கொண்டவன் தானே!

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

103. சீதா கல்யாணம்

சீதை வருகிறாள்

ராமன் தேரிலிருந்து இறங்கி மண்டபத்தை அடைந்து விச்வாமித்திர முனிவர்களையும் தந்தையையும் அடிபணிந்து, தந்தையின் பக்கத்திலிருந்த ஆசனத்தில் அமர்ந்தான். அதே சமயத்தில் சீதையும் மண்டபத்திற்கு வருகிறாள் :

அலைகடல் பிறந்து, பின்னை
அவனியில் தோன்றி, மீள
மலையிடை உதிக்கின் றாள்போல்
மண்டபம் அதனில் வந்தாள்.

[அவனி - பூமி.]

கல்யாண மண்டபத்தின் கிழக்கு வாசலை நோக்கி சீதை தோன்றி வருகிறாள். கிழக்கு முகமாக வீற்றிருக்கும் ராமன் அந்த வருகையையும் அழகையும் அப்படியே பார்க்கிறான். கீழ்த்திசையிலே சூரியன் உதயமாவது போல், சீதையாகிய பெண் - ஜோதி தோன்றுவதாகக் கற்பனை.

சூரியன் முதலில் கடலிலே உதித்துப் பின்பு தரைக்கு அடுத்த நிலப்பரப்பில் விளங்கி, அதன் பின் அப்பாலுள்ள மலை உதயம் பிரகாசிக்கக் கூடுமல்லவா? அப்படியே சீதை என்ற ஜோதியும் முதலில் கடலிலே லக்ஷ்மியாகப் பிறந்தாளாம். பின்பு பூமியிலே சீதா லக்ஷ்மியாகத் தோன்றினாளாம். அதன் பின், மலை போன்ற இந்த மண்டபத்திலே உதயம் செய்கிறாளாம் மணமகளாக.

என்ன கற்பனை! இப் பாட்டின் இசை ஓர் ஆனந்தக் கடல் போலவும், இனிய கருத்தும் கற்பனையும் அந்தக் கடலின் அலைகள் போலவும் வருகின்றன.

தேவர்களும் வருகிறார்கள்

மகாலக்ஷ்மியாகச் சீதை பாற்கடலில் தோன்றிய காலத்திலே மகா விஷ்ணுவாக இருந்த ராமன் அந்தத் திருமகளை மணஞ்செய்து கொண்



டானும். அ
றைத், திரு
கல்யாணத்
தும் இன்றைத்
திருக் கல்ய
ணம் விசேஷ
அழகுடை
தென்று இ
ன்ெற திரு
ணங்களைப்
காணப் பெற்ற
தேவர்கள் ஒரு
முகமாய் அபிப்
பிராயப் பட்டி
ருர்களாம்.

கல்யாண
சிறப்பிலும்
விசேஷமாய்
மணமக்க
ளான சீதார
மர்களின் அழ
குச் சிறப்பைக்
காணவே வந்
தார்களாம்.
இந்தத் தம்பதி
களின் சேர்
த்தி யழகை
காணத் தாங்க
ளும் தம்பதிக
ளாக வந்தார்க
ளாம்.

அன்றினும்
இன்றுடை
த்(து
அழகென்
ருரரோ!
[உடைத்து
உடையது.]

இத்தகை
கல்யாணச்சிற
ப்பைக் காண

தேவேந்திரன் முதலிய தேவர்கள் தங்கள் தேவிமாரோடு வருகிருர்கள்

இந்திரன் சசியோடும்
எய்தி னான்: இளஞ்
சந்திர மௌலியும்
தையலாளுடன்
வந்தனன்; மலரயன்
வாக்கி னாளுடன்

அந்தரம் புகுந்தனன்,
அழகு காணவே.

[சசி - இந்திராணி. இளஞ் சந்திர மௌலி - பிறைசூடிய சிவபெருமான். தையலாள் - உமாதேவி. மலரயன் - தாமரையிலுள்ள பிரமன். வாக்கினள் - சரஸ்வதி. அந்தரம் - வானவீதி.]

போகமும் யோகமும் போல

வசிஷ்டர் திருமணச் சடங்கிற்கு ஆயத்தம் செய்கிறார்; சீதையும் ராமனும் மண வேதிகளில் வீற்றிருக்கிறார்கள்:

மன்ற லின்வந்து
மணித்தவி(சு) ஏறி,
வென்றிநெ டுந்தகை
வீரனும், ஆர்வத்(து)
இன்துணை அன்னமும் 400
எய்தியி ருந்தார்,
ஒன்றிய போகமும்
யோகமும் ஒத்தார்!

[மன்றல் - கலியாணம். மணித் தவிசு - ரத்தின மயமான ஆசனம். வென்றி - வெற்றி. நெடுந்தகை வீரன் - பெருங் குணமுடைய ராமன். ஆர்வம் - அன்பின் மிகுதி. இன்துணை அன்னம் - இனிய துணையாகிய சீதை. ஒன்றிய - ஒன்றுபட்ட.]

சீதா ராமர்கள் போகமும் யோகமும் ஒன்றுபடுவது போல ஒன்றி வீற்றிருக்கிறார்கள். அதாவது, உலக இன்பமும் பரலோக இன்பமும் ஒருங்கே அமர்ந்திருப்பது போலக் காணப்படுகிறார்களாம். உலக இன்பமும் பரலோக இன்பமும் முற்றும் முரண்பட்டன என்பது சாதாரண அபிப்பிராயம். கம்பனைப் போன்ற மகா கவிகளோ உலக வாழ்வையும் பேரின்பமாக அநுபவிக்கும் அதீத சௌந்தர்ய உணர்ச்சி பெற்றவர்கள்; பரலோக இன்பத்தையும் இங்கே ஆகர்ஷித்துக் கொண்டு வந்து அநுபவிக்கக் கூடியவர்கள்.

பூமியும் பொருளும் போல

ஜனகன், ராமன் எதிரே நின்று சீதையை ராமன் கையில் தாரை வார்த்துக் கொடுக்கிறான்:

கோமகன் முன்சன
கன்,குளிர் நன்னீர்,
'பூமகளும் பொரு
ளும்என நீஎன் 401
மாமகள் தன்னொடு
மன்னுதி' என்னாத்
தாமரை அன்ன
தடக்கையின் ஈந்தான்.

[கோமகன் - சக்ரவர்த்தியின் மகனான ராமன். பூமகள் - வளத்துடனும் வனப்புடனும் விளங்கும் பூமி. மாமகள் - அழகிய மகள். மன்னுதி - நிலைபெற்று வாழ்க. என்னா - என்று சொல்லி. அன்ன - ஒத்த. தடக்கை - பெரிய கை.]

"நீ என் மகளுடன் பூமியும் செல்வமும் போல் நிலை பெற்று வாழ்வாயாக!" என்று ஜனகன் குளிர்ந்த நல்ல ஜலத்தைத் தாரை வார்த்துக் கொடுத்தான். நில வளமும் வனப்பும், கைத்தொழில் வர்த்தகம் முதலான பொருளும் ஒருங்கே கலந்திருப்பதுதான் ஒரு நாட்டிற்குச் சிறப்பு என்பது கம்பன் கருத்து. 'அப்படியே நீங்களும் வாழ வேண்டும்' என்பது ஜனகன் வாழ்த்து.

பாணிக்கிரகணம்

அந்தணர்கள் ஆசி கூறுகிறார்கள். பெண்கள் பல்லாண்டு பாடுகிறார்கள். அரசர்கள் 'போற்றி, போற்றி' யென்று வந்தனம் செலுத்துகிறார்கள். நாவலர்கள் வாழ்த்துகிறார்கள். சங்குகள் முழங்குகின்றன.

தேவர்கள் சொரிந்த பூமழையுடன், அரசர்கள் சொரிந்த பொன்மலர்களும், மற்றையோர் சொரியும் முத்துக்களும், வெண்மலர்களும் கலந்து கொண்டு, பூமியையும் நக்ஷத்திரங்களால் விளங்குகிற வானம் போலச் செய்து விடுகின்றன.

ராமன் ஹோமம் செய்து சீதையைப் பாணிக்கிரகணம் செய்கிறான்:

தையல் தளிர்க்கை,
 தடக்கை பிடித்தான். 402

[தையல் – சீதை.]

சீதையின் தளிர் போன்ற மெல்லிய கையை ராமன் தன் பெரிய கையால் பிடித்துக்கொண்டு தீ வலம் வருகிறான். பிறகு அம்மி மிதித்து அருந்ததி பார்க்கிறார்கள். பின்பு தம்பதிகள் முனி சிரேஷ்டர்களான வசிஷ்ட விச்வாமித்திரரை வணங்குகிறார்கள். அப்பால் தசரதனை வணங்கி அரண்மனைக்குள் பிரவேசிக்கிறார்கள்.

கலைத்தேவிக்கும் கல்யாணம்

இத்தகைய சீதா கல்யாணத்திலே உலகம் முழுவதும் மங்கள ஓசைகளால் நிறைந்து விளங்குகிறதாம்.

ஆர்த்தன பேரிகை,
 ஆர்த்தன சங்கம்; 403
ஆர்த்தன நான்மறை,
 ஆர்த்தனர் வானோர்;
ஆர்த்தன பல்கலை;
 ஆர்த்தன பல்லாண்(டு);
ஆர்த்தன வண்டினம்,
 ஆர்த்தன அண்டம்! வேலை

அந்த மகிழ்ச்சியில் 'சிறிது, பெரிது' என்ற வேற்றுமையில்லாமல், எல்லாம் ஒன்றுபடுகின்றன. அற்ப வண்டுகளும் தங்கள் மகிழ்ச்சியை ரீங்கார பாஷையில் அறிவிக்க, அண்டங்களும் அந்தரத்திலே ஆனந்தக் கூத்தாடுகின்றனவாம். இத்தகைய ஆனந்த கோஷங்களில்,

ஆர்த்தன பல்கலை

என்று பலவேறு கலைகளின் ஆனந்த ஆரவாரத்தைக் கவிஞன் சிறப்பாகக் குறிப்பிடுகிறான். சீதா கல்யாணம் கலைகளுக்கும் வெற்றிதான். அந்தப் பங்குனி உத்தரத்தில் தானே கலைப் பெருஞ் செல்வமான கம்பராமாயணம் அரங்கேறியது! அந்த மங்கள முகூர்த்தத்தில் தானே கலைத் தேவியும் கம்பனுக்கு மாலை சூட்டி மகிழ்ந்தாள்!

பி. ஸ்ரீ.

104. மாங்கல்ய தாரணம்

பாணிக்கிரகணம் ஆகிவிட்டது. சீதையின் கையைப் பிடித்துக் கொண்டு அரண்மனைக்குள் சென்ற ராமன், தாயார் மூவரையும் பணிந்து ஆசீர்வாதம் பெற்றான். அம் மூவரையும் ஒருங்கே கண்டதும் முதல் முதல் யாரைப் பணிந்தான், தெரியுமா? தன் தாயான கௌஸல்யா தேவியை அல்ல; முதலில் கைகேயி அடிகளில் தாழ்ந்து வணங்கினான். 'அன்போடு தாழ்ந்து வணங்கினான்' என்று சொல்ல வந்த கவிஞன், 'தாயினும் அன்பொடு தாழ்ந்து' வணங்கியதாகச் சொல்லுகிறான். பெற்ற தாயான கௌஸல்யா தேவியிடம் ராமன் வைத்திருந்த அன்பைக் காட்டிலும் அதிக அன்பைக் கைகேயியிடம் வைத்திருந்தான் என்று குறிப்பிடுகிறான். கைகேயியும் பரதனைக் காட்டிலும் ராமனை அதிக அன்புடன் நேசித்து வந்தாள். மேலும், தந்தையின் உள்ளத்துக்கு இந்த இளைய மனைவி மிகவும் உகந்தவள் அல்லவா?

'நன்மகனுக்கு'...நல்லணி

பாணிக்கிரகணம் முற்றுப்பெற்றதும் ராமன் கைகேயியை முந்தி வணங்கினான் என்று இங்கே – பால காண்டத்தின் இறுதியில் – குறிப்பிடுவது, அயோத்தியா காண்ட முகப்பிலே கைகேயியின் கொடுமையைத் தூக்கிக் காட்டுகிறது. அது மட்டுமில்லை; விதியின் கையிலே ஒரு பெருங் கருவியாக அமையப் போகிறாள் இவ்வுணர்ச்சி - நலம் வாய்ந்த பெண்மணி என்பதையும் சூசிப்பிக்கிறது.

கைகேயியை வணங்கிக் கௌஸல்யா தேவியையும் வணங்கிச் சுமித்திரையையும் தொழுகிறான் ராமன். சீதையும் அந்த முறைப்படியே மாமியாரை நமஸ்கரிக்கிறாள். அப்போது அவர்களுடைய மனநிலை என்ன? எப்படி ஆசீர்வதிக்கிறார்கள்?

கேகய மாமகள்
　　கேழ்கிளர் பாதம்
தாயினும் அன்பொடு
　　தாழ்ந்து வணங்கா,

ஆயதன் அன்னை
அடித்துணை சூடித்
தூய சுமித்திரை
தாள்தொழ
லோடும்,

[கேகய மாமகள் - கேகய மன்னனுடைய சிறந்த புதல்வியான கைகேயி. கேழ் கிளர்-ஒளி மிகுந்த. வணக்கா-வணங்கி. அடித்துணை-உபய திருவடிகள்.]



அன்னமும்
அன்னவர்
அம்பொன்
மலர்த்தாள்
சென்னி
புனைந்தனள்;
சிந்தை
உவந்தார்,
கன்னி
அருந்ததி
காரிகை
காணு,
"நன்மக னுக்(கு) இவள்
நல்அணி" என்றார்.

405

[அன்னம்-சீதை. அம்பொன்-அழகிய பொன். சென்னி-தலை. புனைந்தனள்-அணியாகக் கொண்டு வணங்கினள். உவந்தவர் - உவந்தவர்களாய். காணு-கண்டு. அருந்ததி காரிகை-அருந்ததி போன்ற பெண்.]

ராமன், தான் வில்லை முறிக்கும் சமயத்திலும் சீதையைத் 'தேடரு மாமணி' (தேடிப் பெறுதற்கு அரிய சிறந்த ரத்தினம்) என்று நினைத்தான். இப்பொழுது ராமன் - தாய்மாரும் அந்த அபிப்பிராயத்தை அங்கீகரிப்பது போல், 'நன் மகனுக்கு இவள் நல் அணி' என்று மகிழ்ந்து போகிறார்கள். மருமகளைத் தழுவிக் கொண்டு,

கண்கள் களிப்ப,
மனங்கள் களிப்பார். 406

அழகுக்கடலும் கருணைக்கடலும்

சகல சாஸ்திர பண்டிதர்களான பெரியோர்களின் கட்டளைப்படி ராமனும் சீதையும் ஒரு வெண்பட்டு மெத்தையில் அமர்ந்து 'ஸமாவேசனம்' (மனைவியுடன் இருத்தல்) என்ற சடங்கை நிறைவேற்றுகிறார்கள். அந்த அழகையும், சீதையின் அந்த மன நிலையையும் ஓர் இசைப் படமாகப் பிடித்துக் காட்டும் பாட்டு:

நூற்கடல் அன்னவர்
 சொற்கடல் நோக்கி,
மாற்கடல் அன்ன
 மனத்தவ ளோடும்,
கார்க்கடல் போல்கரு
 ணைக்கடல் பண்டைப்
பாற்கடல் அன்னதோர்
 பாயல ணைந்தான்.

[நூற்கடல் அன்னவர் - வித்யா ஸாகரமான பண்டிதர்கள். சொற்கடல் - கடல் போன்ற கருத்தை வெளியிடும் சொற்கள், மால் கடல் - ஆனந்த லஹரியாகிய கடல். கார்க்கடல்-நீலக் கருங்கடல். கருணைக் கடல்-ராமன். பண்டை - பழமையான. பாயல்-மெத்தை.]



அந்தப் பட்டு மெத்தையில் ராமன் பக்கத்திலே நெருங்கி உட்கார்ந்து கொண்ட சீதையின் உள்ளத்திலே ஆனந்த லஹரி ஒரு சமுத்திரம் போலப் பெருகி விடுகிறது. சீதை அன்புக் கடலாகவும் அழகுக் கடலாகவும் ஆனந்தக் கடலாகவும் வீற்றிருக்க, ராமன் நீலக் கடலும் கருணைக் கடலும் கலந்து வீற்றிருப்பது போல வீற்றிருக்கிறான். அவர்கள் வீற்றிருந்த அந்த வெண்ணிறப் பட்டு மெத்தை ராமன் திருமாலாகிப் பள்ளி கொண்டிருந்த பாற்கடலை நினைப்பூட்டுகிறதாம். வேத விதிப்படி ஹோமாக்கினியை வசிஷ்டன் வளர்க்கிறான்:

பங்குனி உத்தரம்
 ஆன பகற்போ(து)
அங்கண் இருக்கினில்
 ஆயிர நாமச்
சிங்கம் மணத்தொழில்
 செய்த திறத்தால்
மங்கல அங்கி
 வசிட்டன் வளர்த்தான்.

[அங்கண் - அங்கு. இருக்கு - வேதவிதி (ரிக் வேதம்). ஆயிர நாமச் சிங்கம் - ஆயிரம் திருநாமங்களை உடைய திருமாலின் அம்சமான ராமன். திறத்தால் - முறைமைக்கு ஏற்றபடி. அங்கி - அக்கினி.]

திருமணம் இனிது முற்றப்பெ
றது. "சரி, இவ்வளவு முறைய
வைதிகச் சடங்குகளுடன் நட
திருமணத்திலே தாலி கட்
தாகக் கம்பன் சொல்லவில்லையே
என்று வாதிப்பவர்கள் உண்டு. "த
நாட்டில் தாலிகட்டும் வழக்
இல்லை; வடநாட்டுக் கதையான தி
அந்த வழக்கத்தை அனுசரித்
பாடியிருக்கலாம்" என்று சிலர் ச
தானம் சொல்லுகிறார்கள். ஆன
கம்பன்தான் ராம கதையை
தமிழ்க் கதை ஆக்கி விடுகிறானே
பண்டைத் தமிழர் மரபை யொட்
சீதாதேவி கல்யாணத்தைக் காத
மணமாக வர்ணிப்பவன் தாலிகட்டு
தமிழ் வழக்கத்தை மறந்திருக்
முடியுமா? கலியாண தடபுடலி
தாலி கட்ட மறந்த கதை போல
தான் மறந்து விட்டானா?

அப்படியிருக்க முடியாது. அயோ
த்திமா நகரத்தைப் பூமி தேவியி
'நிறை நெடு மங்கல நாணோ?' எ
றும் சீதா லக்ஷ்மியைப் பெண்களு
கெல்லாம் 'திருமங்கல நாண்' எ
றும் வர்ணிக்கும் கவி மாங்கல்ய நா
ணத்தை மறந்திருக்க முடியுமா?

மாங்கல்யச் சரடு அல்லது தா
தான் மற்ற ஆபரணங்களை அணிந்
கொள்ளும் உரிமையை ஒரு பெ
ணுக்கு அளிக்கிறது என்பது தமிழ
கொள்கை. ஆனால், சீதை
நோக்கி, "நீ வீசி யெறிந்த மற்
ஆபரணங்கள் தான் உனக்கு 'மா
கல்யப் பிச்சை' அளித்தன, ரா
னுயிரைக் காப்பாற்றி!" என்று எ
வளவு துணிவாகச் சொல்கிறா

அனுமன்:

மற்றைநல் அணிகள் காண், உ
மங்கலம் காத்த, மாதோ

ஆதலால், மாங்கல்ய தாரண
தைக் குறிக்கும் பாட்டு ஒருவேளை
கால வெள்ளத்திலே மறைந்
போயிருக்கலாமோ? அல்லது, அ
அவ்வளவு சர்வ சாதாரண நிகழ்ச்
யென்ற உய்த்துணரவிட் டிருக்
லாமோ?

பி. ஸ்ரீ.

105. திருமணத்திற்குப் பின்

விச்வாமித்திர முனிவர் மணமக்களுக்கு ஆசி கூறிவிட்டு மறுபடியும் தாம் உகந்த மலையிலே தவஞ் செய்யப் போய் விட்டார். இனி நாம் இவரை ராமாயணத்தில் சந்திப்பதே யில்லை. மண வேள்வி வசிஷ்டரால் நடந்த போதிலும், உண்மையில் சித்தாச்ரமத்திலே தாம் இயற்றிய வேள்வியை யாஜமாகக் கொண்டு விச்வாமித்திரரே திருமணத் தூதராகச் சென்று ராமனை அழைத்து வந்து மண வேள்வியை இனிது நிறைவேற்றி வைத்தார் என்று சொல்லவேண்டும். பின்வரும் 'பெரிய காரியங்'களை உத்தேசித்தே திருமணத்தைத் திருமணத் தூதர் முடித்து வைத்தார் என்றும் ஊகிக்க வேண்டும். அந்தப் பெரிய காரியங்களுக்காக விரிந்த உலகத்தை ஒருவாறு ராமனுக்குக் காட்டி வசிஷ்ட குருகுலத்தில் அவன் கற்ற கல்வியைப் பூர்த்தி செய்து, தர்ம விரோதிகளான அரக்கர்களையும் 'அறிமுகப்படுத்தி' வைக்கிறார். இந்தக் காரியம் முடிந்ததும் விசுவாமித்திரர் மறைந்து விடுகிறார்.

* * * *

தசரதன் தம் மக்கள், மருமக்கள் முதலியவர்களுடன் அயோத்திக்குப் புறப்பட்டான். சக்ரவர்த்தி முன்னே செல்ல மிதிலை வாசிகள் ஜனம் பின்னே தொடர, தம்பிமார் அருகே வர, ராமன் சீதையுடன் இனிமையாக அயோத்தியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான்.

வழியிலே பரசுராமன் மின்னும் ஜடையோடும் வில்லோடும் தன் ஆயுதமான மழுவோடும், முகமும், கண்ணும் நெருப்பைக் கக்க, பயங்கரமாக வருகிறான். தன் தாய் தந்தையருக்குக் கேடு செய்த கார்த்தவீரியார்ச்சுனன் என்ற அரசனுடைய தோள்களை வெட்டித் தள்ளியும் கோபம் தணியாமல் பல வேறு க்ஷத்திரிய அரசர்களையும், வெறி கொண்டவனைப் போல் கொன்று தள்ளியவன். இப்போது ரௌத்ராகாரமாக வருவது கண்டு, தசரதன் தன் அருமைப் பிள்ளையாகிய ராமனுக்குக் கேடு விளையுமோ என்று பயப்படுகிறான்.

பரசுராமனோ இடிக் குரலில் அதட்டிக் கொண்டே ராமன் எதிரில் வருகிறான். சக்ரவர்த்தி ராமனுக்கும் பரசுராமனுக்கும் இடையே போய்த் தரையில் முடி படியப் பரசுராமன் காலில் விழுகிறான்.

'இவனும்என(து) உயிரும்உன(து) 40
அபயம்இனி' என்றான்.

4—3012

‘எனதுயிரும்’ என்பதற்கு முன் ‘இவனும்’ என்று ராமனைக் குறிப் பிடுவதால், இவன் தன் உயிரினும் இனியவன் என்பதும், ராமன் இருந்தா தான் தனக்கும் உயிர் இருக்கும் என்பதும் குறிப்பு. எனவே ராமனை காப்பாற்ற வேண்டுமென்றும், அவனைக் கண்டு இன்புற்றிருக்கவே தன க்கும் உயிர்ப்பிச்சை கொடுக்க வேண்டுமென்றும், ராமனும், தன்னுயிரு பரசுராமனுடைய அடைக்கலப் பொருளாகு மென்றும் சொல்லி ஸ்தோ திரம் செய்கிறான். ஆசையும் அபிமானமும் அதிகமாக அதிகமாக, தச தனைப் போன்ற வீரனுக்கும் கூடப் பயமும் கவலையும் அதிகரிக்கின்றன.

பரசுராமன் அந்தச் சமாதான முயற்சியைச் சிறிதும் கவனிக்கவில் காலில் விழுந்த வீர மன்னனை இகழ்ந்து ராமனை நோக்கிப் பெருஞ் சின தோடும், “நீ முறித்த சிவ தனுசு முன்னமே சிவனுக்கும் விஷ்ணுவுக்கு ஏற்பட்ட போரில் முறிந்து போனதுதான்!” என்ற பீடிகையோடும் தான் வந்த காரியத்தைச் சொல்லுகிறான். “அந்தப் போரில் வெற்றி பெற்ற வில் இதோ இருக்கிறது; இதுதான் விஷ்ணு வில். இதை வளைக்க முடியுமானால் வளைத்துப் பார். உனக்கு வலியிருந்தால் உன்னுடன் போர் செய்யவும் சித்தமாயிருக்கிறேன்” என்கிறான்.

அப்படிப் பரசுராமன் சொன்னதும், என்ன நடக்கிறது? எவ்வள விரைவாக அந்தக் காரியம் நடக்கிறது,—பயமுறுத்துகிறவன் தானே பயந்து நடுங்கும்படி :

என்றனன்;
  என்ன, நின்ற
இராமனும்
  முறுவல்எய்தி
நன்றொளிர்
  முகத்தனாகி,
‘நாரணன்
வலியின் ஆண்ட
வென்றிவில்
  தருக’ என்னக்
கொடுத்தனன்;
  வீரன் கொண்
    டான்,
துன்றிருஞ்
  சடையோன்
    அஞ்சத்
தோளுற வாங்
  கிச் சொல்லும்.

[முறுவல் - புன் சிரிப்பு. நன்று ஒளிர் முகத்தான் - நன்கு ஒளி செய்யும் முகத்தை யுடையவன். வலி-வலிமை. வென்றி - வெற்றி. துன்று இருஞ்




சடையோன் - நெருங்கிய பெருஞ் சடைகளோடு கூடிய பரசுராமன். வாங்கி - வளைத்து.]

"பூதலத் தரசை யெல்லாம்
பொன்றுவித் தனையென் றாலும்,
வேதவித் தாய மேலோன்
மைந்தன் நீ; விரதம் பூண்டாய்!
ஆதலின் கொல்ல லாகா(து):
அம்பிது பிழைப்ப தன்றால்!
யாதிதற்(கு) இலக்க மாவ(து)?
இயம்புதி விரைவின்" என்றான்.

[பொன்றுவித்தனை - அழியச் செய்தாய். வேத வித்து – வேதங்களை நன்கு கண்டு அறிந்தவன். ஆய-ஆகிய. பிழைப்பதன்று – தவறுவதன்று. இலக்கம்–குறிப்பொருள். இயம்புதி–சொல்வாய்.]

பரசுராமனுடைய கோப வார்த்தையைக் கேட்டதும், சீற்றத்தைப் பார்த்ததும், ராமன் அமைதியாகப் புன் சிரிப்புச் சிரிக்கிறான். அந்தப் புன் சிரிப்பு முகமண்டலத்தை நன்றாக ஒளிரச் செய்ய, "அந்த வில்லைத் தந்துவிடு" என்று மெள்ளத் தன் கையில் வாங்கிக் கொள்கிறான்.

திடீரென்று பரசுராமனுக்கு ஏன் இந்த நடுக்கம்? அவ்வளவு அநாயாசமாக ராமன் அந்த விஷ்ணு தனுசையும் வளைத்து விடுகிறான்.



ராமனது இளநகை இளநிலவு போலக் குளிர்ந்து வீசுகிறது. அந்த மாட்சியில் கூசி ஒடுங்குகின்றன நெருப்பைக் கக்கும் சொற்களும் கண்களும். அந்த இளநகையிலே தோய்ந்து அமைதி தழுவி வரும் அந்தச் சொற்கள் பரசுராமன் செவியில் கம்பீரமாக ஒலிக்கின்றன.

"பரசுராமா, நீ உலகத்திலுள்ள அரசகுலத்தாரைக் கொன்ற கொலைஞன்; எனவே தண்டனைக்கு உரியவன். அப்படியிருந்தும் உன்னை நான் மன்னிக்கப் போகிறேன். இந்த மன்னிப்பு வேதவித்தான உன் தந்தை பொருட்டேயாகும். மேலும் தவ வேஷத்தோடு விரதம் பூண்டிருக்கிறாய்; இனி நீ நல்வழிப் படுவாய் என்று நம்புகிறேன். ஆகையால் உன்னை நான் கொல்லப் போவதில்லை. வில்லில் தொடுத்த அம்போ வீணாகப் போவதும் இல்லையே! இதற்கு இலக்கு யாது? விரைவாகச் சொல்லு!" என்று கேட்கிறான்.

'இயம்புதி விரைவின்' என்பது ராமனுடைய ஆத்திரமன்று பயமுறுத்தலுமன்று; ராமபாணம் வெளிப்பட்டு அபாயத்தை உண்டாக்குவதற்கு முன்னே அவன் தப்பவேண்டும் என்ற அருளின் வேகந்தான்.

பிறப்பால் பிராம்மணனாகிய பரசுராமனை ராமன் 'வேத வித்தாய மேலோன்' (பார்ப்பனப் பெரியோன்) என்று ஒப்புக் கொள்ளாமல், 'வேதவித்தாகிய மேலோன் மைந்தன்' என்று கூறுவது கவனிக்கத் தக்கது. பதில் சொல்லும் பரசுராமன் ராமனை 'வேதியா!' என்று அழைப்பதும் சிந்திக்கத் தக்கது.

நீதியாய்! முனிந்திடேல்;
நீஇங்கு யாவர்க்கும்
ஆதியான்; அறிந்தனன்
அலங்கல் நேமியாய்!
வேதியா! இறுவதே
அன்றி வெண்மதிப்
பாதியான் பிடித்தவில்
பற்றப் போதுமோ?

[முனிந்திடேல் – கோபங் கொள்ளாதே. ஆதியான் – ஆதியான தலைவன். அலங்கல் – மாலை. நேமியாய் – சக்கரத்தைக் கொண்ட விஷ்ணுவின் அம்சமானவனே. இறுவது – முறிபடுவது. வெண்மதிப் பாதியான் - பிறை தரித்த பரமசிவன். பற்ற - பிடித்தற்கும்.]
என்று துதிக்கிறான் பரசுராமன்.

கர்வத்திற்குக் காரணமான தபோ பலம் ராமன் அம்புக்கு இலக்காகி அழிந்து போகிறது. பரசுராமன் தொழுது விடை பெற்றுக் கொள்கிறான். இப்போதுதான் தசரதன்—மூர்ச்சித்தவனைப்போல் கிடந்தவன்—உணர்வு வெளிப்பட ராமனை ஆலிங்கனம் செய்து கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறான்.

* * * *

இவர்கள் அயோத்தி அடைந்து சில நாள் சென்றபின் பரதன் தன் தாயார் பிறந்த நாடான கேகய நாட்டுக்குப் போகிறான். இவனும் தந்தையைப்போல் ராமனையன்றி உயிர் வேறு இல்லாதவன். ஆதலால், உயிரைப் பிரிந்து உடல் சென்றாற் போலச் செல்லுகிறான் – என்கிறான் கவிஞன். கைகேயியின் சதியாலோசனையை அறவே வெறுக்கப் போகும் பரதனுடைய குணநிச்சயத்திற்கு இங்கே வித்து இடப்படுகிறது.